பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | மாசி 09 புதன்கிழமை 21.02.2018 | கதிர் 108

## அமைச்சரவைக்கு நேற்று சுசிலும், தயாசிறியும் 'கட்'

கொழும்பு, பெப். 21
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி அமைச்சர்கள் சுசில் பிரேம ஜயந்த, தயாசிறி ஜயசேகர ஆகியோர் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.
உள்ளூராட்சித் தேர்தலின் பின்

பக்கம் 18 >>>

# அரசின் நிதி, பொருளாதாரம் நேரடியாக மைத்திரி கையில்!

## விட்டுக் கொடுப்பதைத் தவிர ரணிலுக்கு வேறு வழியில்லை



கொழும்பு, பெப்ரவரி 21
**முக்கிய அமைச்சுக்களான நிதி அமைச்சு, கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றை - முழுமையாக - நேரடியாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ளார் என நம்பகரமாக அறிய வருகின்றது.**

பக்கம் 18 >>>

## இரகசிய வாக்கெடுப்பு அரசியல் நாகரிகமற்றது

### முன்னணியை சாடுகிறது ரெலோ

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், பெப். 21
உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை பெற்ற கட்சிகள் ஆட்சிமைக்கலாம் என்றிருக்கும் போது யாழ். மாநகர சபை உள்ளிட்ட சில சபைகளில் இரகசிய வாக்கெடுப்பை நடத்தவேண்டுமெனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோருவது அரசியல் நாகரிகமற்

பக்கம் 18 >>>

## மாணவர்களுக்கு கிடையாது 'ரப்'

கொழும்பு, பெப். 21
க.பொ.த உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சுமார் 2 லட்சம் பேருக்கு 400 கோடி ரூபா செலவில் ரப் கணினி வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை வழங்கிய ஒப்புதலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடைநிறுத்தப்

பக்கம் 03 >>>

## சுமந்திரன் - வாசுதேவ நேற்று சபையில் கடும் சொற்போர்!

### ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மீதான விவாதம் காலவரையறையின்றி ஒத்திவைப்பு

கொழும்பு, பெப் .21
மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளின் தமிழ் மொழி மூலமான பிரதி கிடைக்காதமை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் சபையின் அவதானத்திற்குக் கொண்டு வந்தபோது வாசுதேவ நாணக்காரவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் சபையில் கடுமையான மோதல் வெடித்தது.
தமிழ்மொழிக்கொள்கை

பக்கம் 18 >>>

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழினத்தைக் காக்கவேண்டும்

### ரெலோ ஸ்ரீகாந்தா பகிரங்க அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், பெப்.21
சர்வதேச அரங்கில் தப்பித்துக் கொள்வதற்காகத் தென்னிலங்கை சக்திகள் ஒன்றிணைவது போன்று தமிழினத்தைக் காக்கத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் முதல் அரசியல் தீர்வு வரையான பயணத்தில் சகல தமிழ்த் தேசியக்

பக்கம் 03 >>>

## பொதுத் தேர்தல்தான் இப்போது ஒரே வழி

### நல்லாட்சி அரசு வீடு செல்லட்டும் என்று கூட்டு எதிரணி விடாப்பிடி



கொழும்பு, பெப். 21
உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணை நல்லாட்சி அரசின் எதிர்காலப் பயணத்தைத் தோல்வியடையச்

பக்கம் 18 >>>

## அப்பச்சி மஹிந்தவிடம் ஆட்சியைக் கொடுங்கள்!

### கோருகிறார் ஞானசாரதேரர்



கொழும்பு, பெப். 21
தற்போது நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை காணப்படுவதால் யாராவது ஒரு தரப்பினர் அரசை அமைக்க வேண்டும்.

பக்கம் 18 >>>

## அரசியல் தலைவர்கள் நீலகண்டனுக்கு அஞ்சலி



கொழும்பு, பெப்.21
கொழும்பில் காலமான இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டனுக்கு தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் பலரும் நேற்று கட்சிவேறுபாடின்றி திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.
பம்பலப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் பூதவுடல் நேற்று அஞ்ச

பக்கம் 18 >>>

## நோர்வே அரசின் உதவியுடன் மயிலிட்டித்துறை அபிவிருத்தி

யாழ்ப்பாணம், பெப். 21
மயிலிட்டித் துறைமுகத்தை நவீன முறையில் அபிவிருத்தி செய்ய நோர்வே அரசு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 15 ஆயிரத்து 400 கோடி ரூபா) நிதியை வழங்கியுள்ளது என இலங்கைக்கான நோர்வே உதவித்தூதுவர் மொனிக்கா

பக்கம் 18 >>>

## இ னி து ரகசியம் அல்ல!

இது, யாழ்ப்பாணத்தில் பரவலாகப் பேசப்பட்ட ஒரு விடயம்தான். ஆனால், கொழும்பு, ஆங்கில வார இதழ் ஒன்றும் இது பற்றிய தகவலை ஒரு கிசுகிசுப் பத்தியில் கடந்த வாரம் விலாவாரியாகப் பிரஸ்தாபித்திருந்தது.

பக்கம் 03 >>>

## சபாநாயகர் இன்று முக்கிய அறிவிப்பு

கொழும்பு, பெப். 21
ஐ.தே.க. - சு.க. இணைந்த தேசிய அரசின் ஒப்பந்த காலம் தொடர்பில் இன்று நாடாளுமன்றத்தில் தாம் விசேட அறிவிப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார் எனச் சபாநா

பக்கம் 18 >>>

காலைக்கதிர் Kalaikkathir


# சர்வதேசமே எமது இறுதி நம்பிக்கை: உறவுகளுடன் சேரும் வரை போராட்டம்!

கிளிநொச்சி, பெப். 21

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தை ஆரம்பித்து ஒரு வருடத்தை நிறைவு செய்துள்ள நிலையில் நேற்று 366 ஆவது நாளாக கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

வடக்கு, கிழக்கு எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்பினைச் சேர்ந்த பிரதிநிதிகளும், சிவில் சமூக அமைப்புகள், அரசியல் கட்சிகள், மதகுருமார்கள், தென்னிலங்கை அமைப்புக்கள் என பலர் கலந்துகொண்டு நேற்றைய கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் காலை ஒன்பது முப்பது மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நண்பகல் ஒரு மணிவரை இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் அமைப்பைச் சேர்ந்த கலாரஞ்சனி கருத்துத் தெரிவிக்கையில்–


கிளிநொச்சியில் கவனவீர்ப்பு




எங்களது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை, நாட்டின் ஜனாதிபதியும் எங்கள் விடயத்தில் கை விரித்து விட்டார்.

நாங்கள் கேட்பது எங்களது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் இருக்கின்றார்களா? இருக்கின்றார்கள் என்றால் எங்கு இருக்கின்றார்கள்? எப்போது விடுவிக்கப்படுவார்கள்? அல்லது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் உயிரோடு இல்லை என்றால் அவர்களுக்கு என்ன நடந்தது? என்பதுவே.

இதனை பொறுப்புடன் கூற வேண்டிய அரசு பொறுப்பற்று நடந்துகொள்கின்றமை வருத்தமளிக்கிறது.

இலங்கை விடயம் தொடர்பில் ஐ.நாவுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. அதில் ஒரு வருடம் நிறைவுப்பெற்றுள்ள நிலையில் இதுவரைக்கும் நம்பிக்கை தரும் வகையில் எதுவும் இடம்பெறவில்லை.

ஐ.நாவுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இலங்கை அரசை காப்பாற்றும் ஒரு நடவடிக்கையே. எங்களை பொறுத்த வரை இந்த 2 வருடகால அவகாசம் என்பது ஒரு பயனற்ற நடவடிக்கையே.

தமிழ் அரசியல் தரப்புக்கள் தங்களின் கட்சி பேதங்களைக் கடந்து எங்களின் பிரச்சினைகளுக்காக ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும்.

அவ்வாறே சிவில் அமைப்பு பிரதிநிதிகளும் எங்களுக்காக கடந்த காலம் போன்று குரல் எழுப்ப வேண்டும். இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களின் இனப் படுகொலைக்கு சர்வதேசமும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தது. இருந்தும் தற்போதைய நிலையில் எங்களுக்கு இருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை சர்வதேசமே எனவும் அவர் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் 'குற்றங்களை மறைக்க சட்டத்திருத்தமா?', 'சர்வதேசமே உள்நாட்டுப் பொறிமுறையில் எமக்கு நம்பிக்கையில்லை', 'காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கான அலுவலகம் சர்வதேசத்திற்கான கண்துடைப்பு', 'சர்வதேசமே எங்களுக்கு நீதி வேண்டும்', 'நீதி கேட்கும் எமக்கு நிவாரணம் எதற்கு?', 'அடைக்கலமாக கொடுத்தவர்களை அரசு காணவில்லை என்று கூறுவது எப்படி நியாயமாகும்?', 'ஐ.நாவே பன்னாட்டு தலையீட்டுடனான நீதிப் பொறிமுறையே எமக்குத் தேவை' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

(சு–70)

## 40 ஆயிரம் வீதி விபத்து; 3,100 பேர் உயிரிழப்பு!

சாரதிகள் மற்றும் பாதசாரிகளினால் வீதி ஒழுங்குவிதிகள் சமிக்ஞைகளை முறையாக கடைப்பிடிக்காததன் பெறுபேறாக 2017 ஆம் ஆண்டில் சுமார் 40 ஆயிரம் வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இதற்கு மேலதிகமாக வீதி வாகன விபத்துக்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 100 ஆகும் .

மேலும், சுமார் 7 ஆயிரத்து 500 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 2922 வாகன விபத்துக்களில் 3100 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என பொலிஸ் தலைமையக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையக வாகனப்பிரிவின் மூலம் வீதிச் சட்டங்களை முறையாக கடைப்பிடிக்காதோர் குறித்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின்போது சுமார் ஒரு லட்சம் பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனவும் பொலிஸ் அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது.

பொலிஸாரின் கண்காணிப்பு நடவடிக்கையில் சிக்கா தோர் மேலும் பலர் கடந்த வருடத்தில் இருந்திருக்கக்கூடும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீதிவிபத்துக்களை மீறியவர்கள் தொடர்பாக தண்டப்பணம் விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 40 ஆயிரம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக்களில் பெரும்பாலானவை மதுபோதை மற்றும் கவனவீனத்தால் ஏற்பட்ட விபத்துக்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டோ விபத்துக்களை பொறுத்த வரையில் பெரும்பாலான ஓட்டோக்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் பார்க்க அதிக பயணிகளை ஏற்றிச்சென்றமை மற்றும் வீதி ஒழுங்கு விதிகளை கவனத்தில் கொள்ளாமையே காரணம் ஆகும்.

மோட்டார் சைக்கிள் விபத்துக் களும் பெருமளவில் இடம் பெற்றுள்ளன. வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்காது வாகனங்களை செலுத்திய சாரதிகள் மாத்திரம் அன்றி இவ்வாறான தவறுகளை விளைவித்த பாதசாரிகளுக்கு எதிராகவும் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் பொலிஸ் வாகனப்பிரிவிற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தலைக்கவசம் அணியாமை, வாகன பாதுகாப்பு பட்டி அணியாமை, வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமை, காப்புறுதி சான்றிதழ் இல்லாமை ஆகியவற்றுடன் வாகனங்களை செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதசாரிகளுக்கான வீதிக் கடவைகளை விடுத்து வேறு இடங்களில் வீதிகளைக் கடப்போர் வீதி சமிக்ஞைகளின் போது அவற்றை கவனத்தில் கொள்ளாது வீதியைக் கடத்தல், பாதசாரிகளுக்கான நடைபாதையை பயன்படுத்தாமை போன்ற சேவைகளில் ஈடுபடும் பெரும் எண்ணிக்கையிலான பாதசாரிகள் தொடர்பிலும் வாகனப் போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விடயங்களை பொது மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## தமிழ் அரசியல்வாதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை
## வவுனியா நிகழ்வில் மாகாண சுகாதார அமைச்சர்

தமிழ் அரசியல்வாதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சர் ஞா. குணசீலன் தெரிவித்தார்.

வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தில் உள்ள வைத்திய சாலைகளின் குறை நிறைகளை அறிந்துகொள்வதற்கான விஜயத்தினை மேற்கொண்டு வைத்திய சாலை செயற்பாடுகள், தரம் மற்றும் குறைகளை கேட்டறிந்தபின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.



இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வடமாகாணத்தில் வைத்திய உத்தியோகத்தர்களின் பற்றாக் குறை உள்ளது. குறிப்பாக மாவட்ட வேறுபாடு இல்லாமல் சகல மாவட்டங்களிலும் ஆளணி பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இந்தப் பிரச்சினைகள் மத்திய அரசினால் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை என்பதால் தொடர்ந்தும் எங்களால் அந்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் சிறு சிறு தீர்ப்பதற்கு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறேன்.

வவுனியாவில் தனியார் சிகிச்சை என்ற பேரில் தகுதியற்ற மருத்துவர்கள் சிகிச்சைகள் வழங்குகின்றமையுடன் வேறு துறைகளில் சித்தி பெற்றவர்கள் அதற்கு தொடர்பில்லாத வைத்திய முறைகளை மேற்கொள்கின்றனர் என்றும் பொதுமக்களினால் குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப் பட்டுள்ளது.

இதுதவிர்ந்து வவுனியா வைத்தியர்களினால் குறிப்பிட்ட பெயர் விவரங்கள் உள்ளடங்கலாக தங்களது கல்வித்தகைமை அல்லது வைத்திய நிபுணத்துவத்தின் தகுதி அற்றவர்களும் வைத்திய துறையில் ஈடுபடுகின்றனர் எனக் கூறி எனக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. மேலும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமாகாணத்தை பொறுத்த வரை நிறைய சுகாதாரக் குறைபாடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக இவ்வாறான நிறைய விடயங்களுக்கு மத்திய சுகாதார அமைச்சின் கைகளில் தங்க வேண்டிய நிலை கூட இருக்கின்றது.

வடமாகாண சுகாதார அமைச்சு என்ற ரீதியில் இதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். பல்வேறு விதமான நியமனங்கள், வளங்களை பெறுவதற்கு எமது மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லை. ஆகவே எமது மாகாணசபைக் குரிய உச்ச அதிகாரங்களை பெற்றுக்கொண்ட பின்னர்தான் இவ்வாறான பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்கு முன்னர் தேர்தல் காலத்தில் அரசால் அரசியல் இலாபமீட்டுவதற்காக வாக்குறுதிகளை வழங்கி எமது மக்களின் ஒற்றுமையை அல்லது வாக்குகளை சிதறடித்து எங்களது பலத்தைக் குறைப்பதை பார்க்கக் கூடியதாக இருக்கிறது. குறிப்பாக இம்முறை நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் எடுத்த முடிவானது பலருக்கு ஒரு செய்தியை கூறுகின்றது. இது மக்களின் மன வெளிப்பாடாகும்.

இனிவரும் காலங்களில் எங்களிடம் இருக்கின்ற சில தவறுகளை திருத்திக்கொண்டு மக்களிடத்திலே சரியான முறையிலே அணுகவேண்டும், சரியான முறையில் செய்யவேண்டும் என்று இம்முறை நடந்த தேர்தலின் மூலம் எம்மக்களினால் எமக்கு சிவப்புக் கொடி காட்டப்பட்டுள்ளதுடன் எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சு–100)

# ஏழாலையில் குடும்பப் பெண் மர்ம மரணம்

ஏழாலைகிழக்கில்சிவன்கோவிலுக்கு அருகாமையில், காளிகோவிலடியில்சுமார்45வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் கண்டுபிடிக் கப்பட்டிருக்கின்றார்.

பாலகிருஷ்ணன் அனுஷா என்ற குடும்பப் பெண்ணே தமது வீட்டின் கிணற்றினுள் தலைகுப்புற இறந்து கிடந்த நிலையில் உறவினர்களினால் நேற்று மதியம் கண்டுபிடிக்கப்பட்டார்.

பல்கலையில் பயிலும் இவரது ஒரே மகளும், கணவரும் ஓரிரு தினங்களுக்கு முன்னர் கொழும்பு சென்றிருந்தமையால் இவர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார்.

இவரைக் காணாமல் தேடிய இவரது உறவினர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது நித்திரைப் பாய் விரிக்கப்பட்ட நிலையில் அப்படியே இருந்தது. சடலம் கிணற்றுக்குள் குப்புறக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிய வந்தது. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தது இதுதான்:–

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். மாநகர சபைக்காகக் கூட்டமைப்பில் 'சீட்' கேட்டு போட்டா போட்டி நிலவியது. பல விசேட தகுதிகள் கவ னத்தில் எடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்று 'சுமந்திரனின் ஆளாக இருத்தல்' அல்லது 'சுமந்திரனின் ஆளின் ஆளாக இருத்தல்' என்பதாகும்.

அப்படி 'சுமந்திரனின் ஆளின் ஆளாக' இருந்த ஓர் அல்லக்கையின் அனுபவம் பற்றிய தகவல் இது.

முதல்வர் விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாண சபையைக் குழப்புவதற்கு சுமந்திரனின் அல்லக்கைகளாக நான்கு பேர் செயற்பட்டனர் என்பது தெரிந்ததே. அவர்களின் மூவர் சரியோ பிழையோ மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஆனால் இது பட்டியலில், பின்கதவால் வந்த மற்றவர் தொடர்புபட்ட விவகாரம்.

யாழ். மாநகர சபையில் போட்டியிடத் தங்களுக்கும் இடம் தருமாறு கூட்டமைப்பிடம் கோரியது யாழ். வணிக கழகம். ஆள்களையும் சிபாரிசு செய்தது. ஆனால் கூட்டமைப்பு அந்தக் கோரிக்கையை பரிசீலிக்கவோ, கவனத்தில் எடுக்கவோ கூட இல்லை. வணிகர் கழகப் பரிந்துரைகளை குப்பைக்குள் கடாசிவிட்டது கூட்டமைப்பின் மார்ட்டின் றோட் தலைமை.

ஆனால், சுமந்திரனின் இந்த அல்லக்கை மட்டும் தனது சமூகத்தைச் சேர்ந்த நான்கு வர்த்தகர்களை கூட்டமைப்புப் பட்டியலுக்குள் நுழைத்துவிட்டது – சுமந்திரனிடம் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி.

அவர்களில் இருவருக்கு நேரடியாக வட்டாரத்தில் போட்டியிட வாய்ப்பு. மற்றைய இருவருக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியலில் இடம்.

வட்டாரத்தில் போட்டியிட்ட மேற்படி அல்லக்கையின் ஆள்கள் இருவரில் ஒருவர் தோற்றுப் போய்விட்டார்.

ஆனால், அல்லக்கை விடவில்லை. தோற்ற வேட்பாளருக்குக் கயிறு கொடுத்தார். சுமந்திரன் மூலம் விகிதாசாரப் பட்டியலில் ஓரிடம், வட்டாரத்தில் தோற்ற நபருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று 'புருடா'விட்டார்.

அவ்வளவுதான். தோற்ற தமக்கு மாநகரசபை உறுப்பினர் பதவி உறுதி என்ற மகிழ்ச்சியில் அவருக்குத் தலைகால் புரியவில்லை. இந்த சந்தோஷத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டாமா?

ஒரு லட்சம் ரூபாவுக்கு வெடிகள் வழங்கி யாழ். நகரை ஒரு கலக்குக் கலக்கும் விதத்தில் வெடிப்புகளினால் அதிர வைத்துவிட்டார்.

அந்தோ பரிதாபம்... வெடித் திருவிழா முடிந்ததும், அந்த வேட்பாளரின் மகிழ்ச்சிக்கு வெடி வைப்பது போல செய்தி மார்ட்டின் வீதியில் இருந்து வந்தது. – 'தோற்றவர்களுக்கு பட்டியல் நியமனம் கிடையாது' என்பது தான் அது.

நொந்துபோனார் அந்த வர்த்தகர். தமக்கு முதலில் சீற் வாங்கித் தந்து, தோற்ற பின்னர் கயிறு கொடுத்த அந்த அல்லக்கையிடம் சென்றார்.

தமது எரிச்சலைக் கொட்டித் தீர்த்தார். "தேர்தல் பிரசாரத்துக்காக செலவழித்தமையை விட மிக அதிகமான தொகையை நீங்கள் கொடுத்த கயிற்றை விழுங்கி, அதை நம்பி வெடிக்கு மட்டுமே செலுத்திவிட்டேன். ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் வெடிக்கு மட்டும் போய்விட்டது." – என்று மனம் நொந்து கொட்டித் தீர்த்தராம் அந்த மாற்று இன வர்த்தகர்.




அந்த ஆங்கில ஞாயிறு இதழ் இந்தத் தகவலைப் பிரசுரித்து, அதனுடன் சேர்த்து வெளியிட்ட 'கார்ட்டூன்' படத்தையே அருகில் பிரசுரித்துள்ளோம்.

அதில் ஒரேயொரு சிறிய தவறுதான். வெடி கொளுத்தும் அந்த வேட்பாளர் நெற்றியில் பொட்டு இருப்பதாகக் காட்டியது தான் பிழை!

-மின்னல்-

# நாரந்தனையில் குடும்பத் தலைவரை வெட்டிய 4 பேருக்கு சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், பெப்.21

நாரந்தனையில் குடும்பத் தலைவர் ஒருவருக்கு வெட்டிப்படு காயம் ஏற்படுத்திய 4 குற்றவாளிகளுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 ஆண்டு கள் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

அத்துடன், பாதிக்கப்பட்டவருக்கு இரண்டாவது எதிரி 6 லட்சம் ரூபாவையும் ஏனைய மூவரும் தலா 2 லட்சம் ரூபாவையும் இழப்பீடாக வழங்கவேண்டும் என்றும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

2015ஆம் ஆண்டு ஜுன் 3ஆம் திகதி ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்குப் பகுதியைச் சேர்ந்த அன்ரன் எட்வெட் ஹென்றி என்பவரை கும்பல் ஒன்று வெட்டிக் காயப்படுத்தியது. அவரது ஒரு கை துண்டாகியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் டெலஸ் டிலக்ஸன், சிவராசா கமிஸ்ரன், சச்சிதானந்தம் லக்ஸ்மன், சச்சிதானந்தம் சஜீவன் ஆகிய நான்கு இளைஞர்களை பொலிஸார் கைது செய்தனர்.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டு 4 சந்தேநபர்களுக்கும் எதிரான வழக்கு ஆவணங்கள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டன. சந்தேகநபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 4 பேருக்கும் எதிராகக் கொலைமுயற்சிக் குற்றச்சாட்டை முன்வைத்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

எதிரிகள் நால்வரும் சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையாகினர். அவர்களுக்குக் குற்றப்பத்திரிகை வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

எதிரிகள் நான்கு பேரும் குற்றத்தை ஏற்றுக்கொள்கின்றனர். அது தொடர்பில் அவர்கள் இப்போது வருந்துகின்றனர். எனவே அவர்களுக்குக் குறைந்தபட்ச தண்டனையை வழங்கவேண்டும் என்று எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.எஸ். செலஸ்ரின் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

எதிரிகள் குற்றத்தை தாமாகவே முன்வந்து ஒத்துக்கொண்டுள்ளனர். இது கொலை முயற்சிக் குற்றமாகும். அதற்கு அதிகபட்சத் தண்டனை விதிக்கப்படுவதுடன், அவர்களால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

### நீதிபதி தீர்ப்பு

எதிரிகள் நான்கு பேரும் தம் மீதான கொலை முயற்சிக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டுள்ளனர். அவர்கள் 4 பேரையும் மன்று குற்றவாளிகளாக இனங்கண்டு 10 ஆண்டுகள் ஒத்தி வைக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையை விதிக்கிறது.

பாதிக்கப்பட்டவருக்கு இரண்டாவது எதிரி 6 லட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். முதலாவது, மூன்றாவது மற்றும் நான்காவது எதிரிகள் பாதிக்கப்பட்டவருக்குத் தலா 2 லட்சம் ரூபா நிதியை வழங்கவேண்டும். அதனை வழங்காவிடின் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

4 எதிரிகளும் தண்டமாக 5 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். – என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

இழப்பீடு மற்றும் தண்டப் பணம் செலுத்த குற்றவாளிகள் நால்வருக்குவரும் ஏப்ரல் 24ஆம் திகதிவரை அவகாசம் வழங்கி மன்று உத்தரவிட்டது.

இதேவேளை எதிரிகள் 4 பேரும் 25 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ–7)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளும் இணைந்து பயணிக்க முன்வரவேண்டும்.

– இவ்வாறு ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். நகரிலுள்ள விடுதியொன்றில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒரு சில சக்திகள் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில், தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து பார்த்தால் வடக்கு – கிழக்கில் கூட்டமைப்புக்கான ஆதரவு அசையாமல் இருப்பதை உணர முடியும்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பன தலா இரண்டு சபைகளிலேயே பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்றபோது, ஏனைய அனைத்துச் சபைகளிலும் கூட்டமைப்பே பெரும்பான்மையைப் பெற்று மீளவும் தனது பலத்தை நிலைநிறுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் கிடையாது. ஆகவே, பொதுக் கொள்கையின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்றை வென்றெடுப்பதற்கு ஏதுவாக ஒன்றுபட்டுப் புரிந்துணர்வுடன் செயற்பட முன்வரவேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.

கடந்த காலங்களிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையில் எத்தனையோ வேறுபாடுகள், கருத்து முரண்பாடுகள் மட்டுமல்லாது மோதல்களும் இருந்த நிலையில், தமிழ் மக்களுக்காக ஒன்றுபட்டுச் செயற்பட்டிருக்கின்றோம். ஆகவே, தற்போது தமிழ் மக்கள் எம்மிடம் எதிர்பார்க்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு முதல் அரசியல் தீர்வு வரையிலான செயற்பாடுகளுக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டியது அவசியம்.

தென்னிலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற அரசியல் குழப்பங்களால் எதிர்காலத்தில் என்ன நடக்குமென்று ஆடரூம் கூற முடியாத நிலைமைகள் இருக்கின்றன. ஆகையினால், தீர்வு முயற்சியைப் புறந்தள்ளிச் செயற்பட முடியாத நிலையில், கூட்டமைப்பு தீர்வை நோக்கிய எதிர்பார்ப்பில் பயணித்துக் கொண்டிருக்கிறது. எனவே இத்தகைய நிலைமைகளைச் சிந்தித்து ஒன்றாக இணைந்து செயற்பட கட்சிகள் முன்வரவேண்டும்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் முறியடிக்கப்படுமாக இருந்தால் அல்லது சிதைக்கப்படுமாக இருந்தால் தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிக்காது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலிலேயே தமிழ்க் கட்சிகளாகிய நாங்கள் பிரிந்து நின்றமையால் பேரினவாதக் கட்சி கள் தமிழர் நிலங்களில் ஊடுரு வியிருக்கின்றன.

இவ்வாறு குறுகிய அரசியல் இலாபங்களுக்காகத் தொலைதூரக் கண்ணோட்டமின்றி நாங்கள் செயற்படுவோமாக இருந்தால், பேரினவாதக் கட்சிகளே மீளவும் இங்கு பலமாக ஊடுருவுகின்ற நிலையே ஏற்படும். ஆகையினால் வடக்கு – கிழக்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் மக்களுக்காக ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

இதன் அர்த்தம் எல்லோரும் கூட்டமைப்பில் இணையுங்கள் என்றல்ல. ஆனாலும் சகலரும் கூட்டமைப்பில் இணைவதற்கான கதவுகள் திறந்தே உள்ளன. ஆகையினால் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வை நோக்கிய பயணத்திற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்து இணைந்து செயற்பட வேண்டுமென்றே கேட்கின்றோம். – என்றார். (ஐ–7)

## மாணவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணித்துள்ளார்.

ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 78 மாணவர்களுக்கும் 36 ஆயிரத்து 70 ஆசிரியர்களுக்கும் 'ரப்' கணினிகளை வழங்கும் திட்டத்தை 2017ஆம் ஆண்டு கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டதாக அமைச்சரவை இணைப்பேச்சாளர் கயந்த கருணாதிலக கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

இந்தத் திட்டத்தில் வழங்கப்படும் ரப் கணினியை 27 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதற்கு வழங்கல் நிறுவனமும் தேர்வு செய்யப்பட்டது.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையில் இந்தத் திட்டத்தை இடைநிறுத்தி வைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை வழங்கினார். (ஐ)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சட்டவியாக்கியானத்தில் சிக்கியுள்ள தெற்கு அரசியல்

தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி அதிர்வு - புயல் - ஓய்வுக்கு வந்தாலும், அது தற்காலிகத் தணிவுதான் என இப்பத்தியில் நேற்றுக் குறிப்பிட்டிருந்தோம்.

அது சரிதான் என்பதை பிரதி சபாநாயகரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகருமான திலங்க சுமதிபால தெளிவு படுத்தியிருக்கின்றார்.

பிரதமர் ஒருவரைப் பதவி விலக்குவது தொடர்பாகத் தனக்குள்ள அதிகாரங்கள் குறித்து உயர்நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை கோரவிருக்கின்றார் என்றும் -

அதுவரையில் நல்லாட்சி அரசில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அனுசரித்துப் போகும்படி ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை சுதந்திரக் கட்சியினர் ஏற்று, அதன்படி நல்லாட்சி அரசு தொடர இடமளித்துள்ளனர் என்றும் -

பிரதி சபாநாயகர் கூறிய கருத்து சில விடயங்களைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

முதலாவது - நல்லாட்சி அரசில் ஐ.தே.கட்சித் தரப்புடன் சு.கவினர் இணங்கிப் போகின்றமை ஒரு தற்காலிக ஏற்பாடு தான்.

அடுத்தது - நல்லாட்சி அரசின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்கு ஆப்பு வைக்கும் அதிகாரம் தமக்கு உண்டா என்பதை, ஒரு புறம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பரிவாரங்களைக் கொண்ட அமைச்சரவைக்குத் தாம் தலைமை வகித்தபடி, மறுபுறம் உயர்நீதிமன்றத்தில் எழுத்து மூலம் ஆலோசனையாக்க கோருவார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பது உறுதியாகியுள்ளது.

மூன்றாவது - உயர் நீதிமன்றத்தின் ஆலோசனை தமக்கு வாய்ப்பாக அமைந்தால், அது கிடைத்த கையோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியிலிருந்து விலக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்தச் சமயத்திலும் ஆரம்பிப்பார்.

அதையடுத்து எம்.பிக்களை விலைக்கு வாங்கும் குதிரைப் பேரம் மும்முரமாகிவிடும்; சுறுசுறுப்பாகிவிடும்.

இப்படி, எதிரெதிர் நிலையில் நின்றபடி - பிணக்குப்படுவதற்கு இணங்கியபடி - இரு தரப்புகள் சேர்ந்து நடத்தும் அரசுக்கு 'நல்லாட்சி அரசு' என்று இனியும் அழைப்பது வெறும் கேலிக் கூத்தன்றி வேறில்லை.

இந்த விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கோரும் ஜனாதிபதியின் நிலைப்பாடும் கூட சர்ச்சைக்குரியதே.

முதலில், இவ்விடயத்தில் சட்டமா அதிபரின் கருத்தை ஜனாதிபதி கோரியிருந்தார். அவ்விடயம் தொடர்பில் தனது கருத்து நிலைப்பாட்டை சட்டமா அதிபர் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியிருந்தாராயினும், இவ்விடயத்தில் - குறிப்பாக அரசமைப்புக்கு வியாக்கியானம் செய்யும் விடயத்தில் - அல்லது அரசமைப்பு வாசகங்களுக்கு பொருள் கோடல் விவகாரத்தில் - தனித்துவமான உரிமையும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்துக்கு மட்டுமே உரியது என அரசமைப்பிலே தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால், உயர்நீதிமன்றத்திடம் அது குறித்துக் கேளுங்கள் என்று ஜனாதிபதிக்குப் பதிலளித்து, நைஸாக விலகிக் கொண்டு விட்டார் சட்டமா அதிபர். அவர் கூறிய கருத்து சரியானதுதான்.

ஆனால் உயர்நீதிமன்றத்தின் கருத்தை ஜனாதிபதி கோரும் விவகாரத்தில் சட்ட நுட்பச் சிக்கல் உள்ளது.

ஒரு விடயத்தை உயர்நீதிமன்றம் திறந்த அல்லது மூடிய நீதிமன்றத்தில் விவாதத்துக்கும், பரிசீலனைக்கும் எடுத்து, பல தரப்புகளின் கருத்துக்களையும் உள்வாங்கி, ஓர் இறுதி முடிவை எடுப்பது - அல்லது தீர்ப்பை வழங்குவது - வேறு.

பல தரப்புக் கருத்துடையோரும், எதிரெதிர் நிலைப்பாடுகளைக் கொண்ட கட்சிகள் மற்றும் அணிகளும் தத்தமது சட்ட வாதங்களையும், வியாக்கியானங்களையும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்து, அவற்றை செவிமடுத்த பின்னர், நீதி, நியாயமான ஒரு முடிவுக்கு உயர்நீதிமன்றம் வந்து தீர்ப்பளிப்பது இந்த வகை.

அப்படியல்லாமல், ஒரு விடயம் குறித்து, சம்பந்தப்பட்ட தரப்புகளின் வாதங்கள், விவாதங்களுக்கு இடமளிக்காமல், மூடிய அறைக்குள் உயர்நீதிமன்ற நீதியரசர்களே தங்களுக்குள் கூடி ஆராய்ந்து ஒரு முடிவை அறிவிப்பது வேறு.

இப்போது ஜனாதிபதி கோரவிருக்கும் ஆலோசனை விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் கருத்து இத்தகையதாகத்தான் அமையப் போகின்றது. அது உயர் நீதிமன்றம் தனக்குரிய ஆலோசனை நியாயாதிக்கத்தின் கீழ் வழங்கக் கூடிய பரிந்துரை மட்டுமே. சட்டரீதியாகக் கட்டுப்படுத்தும் (Binding) உத்தரவாக - அல்லது தீர்ப்பாக - அது அமையமாட்டாது.

அவ்வாறு உயர்நீதிமன்றம் வழங்கக் கூடிய ஆலோசனை - பரிந்துரை - சட்டரீதியாக விதிப்புக் கடப்பாட்டை (Binding) கொண்டது அல்ல என்பதால், அவ்வாறான ஆலோசனைப் பரிந்துரையின் அடிப்படையிலான ஒரு செயற்பாட்டுக்கு எதிராக உயர்நீதிமன்றத்திலேயே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, பல தரப்பு வாதங்களையும் உயர்நீதிமன்றம் செவிமடுக்கும் போது, சில சமயங்களில் தனது முன்னைய பரிந்துரை நிலைப்பாட்டிலிருந்தே தன்னை மாற்றிக் கொள்ளும் இடர்பாடு உயர் நீதிமன்றத்துக்கு வரலாம் என சில சட்ட அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்தகைய, சர்ச்சைக்குரிய ஒரு சட்ட விவகாரத்தில் வெறும் ஆலோசனை நியாயதிக்கத்தின் கீழான பரிந்துரை தனக்கு வாய்ப்பாக வந்தால், அதனை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு பிரதமரை அப்பதவியிலிருந்து ஜனாதிபதியினால் இறக்க முடியும் என்பது உண்மையில் சட்டத்தின் ஆட்சியை முறையாக நிலைநாட்டும் தன்மையுடையதாக எமக்குப்படவில்லை.

# இலங்கை குறித்து ஜெனீவாவில் இரண்டு முக்கிய விவாதங்கள்

கொழும்பு, பெப். 21

ஐ.நா. மனித உரிமைகள்பேரவையில் 37 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில், மார்ச் 16 ஆம் திகதியும், மார்ச் 21 ஆம் திகதியும் இலங்கை தொடர்பான இரண்டு முக்கிய விவாதங்கள் இடம்பெறவுள்ளன.

பூகோள கால மீளாய்வு கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கை, பெனின், பாகிஸ்தான், ஸாம்பியா, ஜப்பான், உக்ரேன் ஆகிய நாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் மீதே மார்ச் 16 ஆம் திகதி விவாதம் நடத்தப்படவுள்ளது.

அதேவேளை, இலங்கை தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் வாய்மொழி அறிக்கை மார்ச் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பொது விவாதத்தின் தொடர்ச்சியாக இந்த விவாதம் இடம் பெறும்.

இந்தக் கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்சையிட் ராட்அல்ஹுசேன் இலங்கை தொடர்பான காட்டமானகருத்துக்களை முன்வைப்பார் என்று தகவல்கள் கூறுகின்றன.

இலங்கைக்கு இரண்டு ஆண்டு காலஅவகாசம் அளிக்கப்பட்டுள்ளபோதும், ஒரு ஆண்டு நிறைவடைந் துள்ள நிலையிலும், பொறுப்புக்கூறல் விவகாரங்களில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் உயர்வு!

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்குகளின் அடிப்படையில் கட்சிகளுக்கு கிடைத்த ஆசனங்களை விடவும், தொகுதிகளில் வெற்றியீட்டிய காரணத்தால் ஆசனங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

சுமார் 364 உறுப்பினர்கள் மேலதிகமாக தெரிவாகியுள்ளனர். இதன்படி, 340 உள்ளூராட்சி மன்றங்களுக்காக தெரிவாகியுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 689 ஆகும் என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

340 உள்ளூராட்சி மன்றங்களில் 8 ஆயிரத்து 325 உறுப்பினர்கள் தெரிவாக வேண்டியிருந்தபோதிலும், அந்த எண்ணிக்கை 364இனால் உயர்வடைந்துள்ளது.

மேலதிகமாக தெரிவாகிய உறுப்பினர்களுக்கான செலவுகளையும் மக்களே ஏற்றுக் கொள்ள நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அபுதாபி முகாம்களிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை!

கொழும்பு, பெப். 21

அபுதாபி பாதுகாப்பு தடுப்பு முகாமிலுள்ள இலங்கையர் களை விரைவாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதி மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

அபுதாபிக்கு விஜயம் செய்த திருமதி அத்துக்கோரள முகாம்களில் தங்கியுள்ள இலங்கையர்களின்சேம நலன்கள் தொடர்பான விடயங்களையும் கண்டறிந்தார்.

தொழில்வாய்ப்பிற்காக அங்கு சென்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டவர்கள் இந்த முகாம்களில் தங்கியுள்ளனர். இவ்வாறானோரை விரைவாக நாட்டுக்கு அழைத்துவர ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

## தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்கிறார் கல்வி அமைச்சர்


கொழும்பு, பெப். 21

தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் பெருமளவில் காணப்பட்டன. கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் இதற்கு ஏற்ற தகுதியான தரத்தைக் கொண்டவர்கள் இருக்கவில்லை. இதன் காரணமாக அதிபர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



கல்வி நிர்வாக சேவையில் 852 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு ஒரு வருடகால பயிற்சி வழங்கப்பட்டது. அதிபர் தரம் III இற்கு சுமார் 4 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். நிலவும் வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 353 ஆகும். நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 121 ஆகும்.

நிரந்தர அதிபர் இல்லாத தேசிய பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. இதற்கான அறிவிப்பை வெளியிடுவதற்காக தேசிய பாடசாலை பட்டியல் மற்றும் ஏனைய ஆவணங்கள் அரசசேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

(க)

### நாளை

22.02.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : பரணி மு.ப 11.42 வரை
திதி : ஸப்தமி பி.இ 12.13 வரை
சுபநேரம் : 8.01 – 9.31 வரை
இராகுகாலம்: 2.01 – 3.31 வரை

தேர்தலின் பின்னர் ஏற்பட்டிருக்கும் நிலைவரத்தை அடிப்படையாகக்கொண்டு

# ஜனாதிபதி மைத்திரிபால பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் ஏற்பட்டிருக்கும் நிலைவரத்தை அடிப்படையாகக்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்து, ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும்.

அதன் மூலம் மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள முடியும். அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்த முடியும்.

எனினும், மக்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்பளிக்காது அரசு பயணிக்க முற்படுமாயின் அந்தப் பயணத்தை மாற்றுவதற்கான வழி எமக்குத் தெரியும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கூட்டுஎதிர்க்கட்சிஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் மத்திய அரசில் தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளது. அரசு கடந்த மூன்று ஆண்டுகள் முன்னெடுத்த கொள்கைத் திட்டங்களுக்கு எதிராகவே மக்கள் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு அதிகளவிலான வாக்குகளை வழங்கியுள்ளனர். எனினும் அந்த ஆணைக்கு பின்னரும் நல்லாட்சி அரசு தொடர்ந்து செல்ல முடியுமென நினைக்குமாயின் அது இன்னும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஐக்கிய தேசியக் கட்சியை அரசிலிருந்து விலக்குமாறும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரதமர் ஒருவரை நியமிக்குமாறும் அரசுக்கு நாம் எதிர்க்கட்சியிலிருந்து ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தோம்.

ஆயினும் எமது இந்த வேண்டுகோளை ஜனாதிபதி மைத்திரி ஏற்றுக்கொள்ளாது தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தை சீர் குலைத்து விட்டதாக ஜனாதிபதிதான் குறிப்பிட்டார்.



விமல் வீரவன்ஸ கூறுகிறார்

எனினும், அவர் மீண்டும் அத்தரப்பிற்கு ஆட்சியை வழங்கி எஞ்சியுள்ள பொருளாதாரத்தையும் சீர்குலைப்பதற்கு வழிவகுக்கவுள்ளார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்பின் 18 ஆம் திருத்தத்தைக் கொண்டுவந்து காலம் முழுவதும் அதிகாரத்தில் இருப்பதற்கு எதிர்பார்ப்பதாக சிவில் சமூகப் பிரதிநிதிகள் குற்றம்சாட்டினர்.

எனினும், அரசமைப்பின் 19 ஆம் திருத்தத்தின் பிரகாரம் பிரதமரை விலக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பிரதமரை விலக்குவது தொடர்பில் ஜனாதிபதி உயர்நீதிமன்றிடம் விளக்கம் கோரியுள்ளார். அந்தளவிற்கு நாட்டின் ஆட்சி முறையை நல்லாட்சி அரசு சிக்கலுக்குட்படுத்தியுள்ளது.

எனினும், ஜனாதிபதி தனது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து, ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும். அதன் மூலம் மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள முடியும். அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த முடியும். ஆயினும் அவற்றை மேற்கொள்ளாது நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டுசெல்கின்றனர். நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழச்சி கண்டு செல்கிறது.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைமை வகிப்பதற்கான தார்மீகம் இல்லை. சட்டரீதியாகப் பார்த்தால் எதிர்க்கட்சித்தலைமை முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிற்கு கிடைக்க வேண்டும். அது தொடர்பில்கூட அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

ஆகவே, அரசு மக்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்பளிக்காது தான்தோன்றித்தனமாக பயணிக்குமாயின் அப்பயணத்தைத் திருப்புவதற்கான வழி தமக்குத் தெரியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விகாரையில் திருடிய மூன்று மாணவர் கைது!

கொழும்பு, பெப். 21

விகாரை ஒன்றில் திருடிய 3 மாணவர்களை பூஜாபிட்டிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கண்டி பூஜாபிட்டிய பிரதேசத்திலுள்ள பழைமை வாய்ந்த விஹாரை ஒன்றில் இருந்த நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை திருடிச்சென்ற பிரபல பாட சாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் மூவரையே பூஜாபிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அதிகாலையில் சந்தேகத்திற்கிடமாக நின்ற மாணவர்களைக்கண்டு அவர்களை விசாரித்த போது அவர்களிடம் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று இருப்பதைக் கண்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்திய பொலிஸார் இவ் இயந்திரம் அப் பிரதேசத்திலுள்ள பழைமை வாய்ந்த விஹாரை ஒன்றில் இருந்து திருடப்பட்டதாக தெரியவந்துள்ளது. அதன் பின் இதனைத் திருடினர் எனச் சந்தேகிக்கப்படும் மூன்று மாணவர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களுள் இருவர் கண்டியில் பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பவர்கள் என்றும் மற்றவர் அண்மையில் பரீட்சை எழுதிவிட்டு பாடசாலையை விட்டுவிலகியுள்ளவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட மூன்று மாணவர்களும் கண்டி நீதிவான் முன் ஆஜர்செய்ய உள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பூஜாபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை கிரிக்கெட்டை மேம்படுத்தத் திட்டம்!

கொழும்பு, பெப். 21

பாடசாலை கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்தத் தேவையான வசதிகள் வழங்கப்படும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக 680 பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பு மேற்கொள்ளவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஜா-எல தொழிற்சாலை தீ விபத்தில் சேதம்

கொழும்பு, பெப். 21

ஜா-எல, ராஜமாவத்தையில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் இரவு இந்தத் தொழிற்சாலையில் தீபரவியதுடன் தீயணைப்பு படையினர், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளின் முயற்சியில் தீ அணைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீ விபத்தில் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக ஜா-எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிரிம்பே ஆனந்த தேரர் காலமானார்!

கொழும்பு, பெப். 21

ஸ்ரீலங்கா ராமன்ஞ மகா நிக்காயாவின் அனுநாயக்க, அனுராதபுர சரானந்த விகாராதிபதி கிரிம்பே ஆனந்த தேரர் காலமானார்.

சுகயீனம் காரணமாக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

## சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்குமா?

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை 300 ரூபாவால் அதிகரிக்குமாறு கோரப்பட்டுள்ளது.



சர்வதேச சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக இந்த விலை அதிகரிப்புக்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## தவக்கால சிந்தனை

## சுவைத்துப் பாருங்கள்

*“ஆண்டவன் எனது ஆயர், எனக்கேதும் குறையில்லை”*
*- திருப்பாடல் 23:1.*

இறைவன் எமது நல் ஆயனாக, அன்புத் தந்தையாக இருக்கும் பொழுது எனக்கு எந்தவிதமான குறையும் எழாது. ஆனால் பொறுப்பற்ற மதுப் பிரியரான தந்தையின் பிள்ளைகளுக்கு இறைவனை 'அப்பா' என்று அழைக்கும் பொழுது அது புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கும். ஏனெனின் அவர்கள் தமது தந்தையிடமிருந்து உண்மையான அன்பைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதேயாகும்.

இறைவன் எப்பொழுதும் வல்லவரும் நல்லவருமான அன்புத் தந்தையாகவே விளங்குகின்றார். 'அப்பா நல்ல தந்தாய்' என்பதையே இறைவனைப் பற்றிய விளக்கமாக புனித குழந்தை இயேசுவின் தெரேசா விளங்குகின்றார். அன்புக்குப் புறம்பாக இறைதந்தையைப் பார்ப்பது அவருக்கு இயலாததாகும்.

“நீங்கள் பெற்றுக் கொண்டது திரும்பவு அச்சத்துள்ளாக்கும் அடிமை உள்ளம் அன்று. பிள்ளைகளுக்கும் தேவ ஆவியையே பெற்றுக் கொண்டீர்கள். அந்த ஆவியினால் தான் 'அப்பா தந்தாய்' எனக் கூப்பிடுகின்றோம். – உரோ 8:15.

“நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பும் கொண்டுள்ளார் என்று பாருங்கள். கடவுளின் மக்கள் என அழைக்கப்படுகின்றோம். கடவுளுடைய மக்களாகவே இருக்கின்றோம்”– 1 யோவான் 3:1.

படைத்தவன் படியளப்பான் என்பதற்கொப்ப இறைவன் எமது தேவைகளை நிறைவு செய்வதில் ஆற்றல் மிக்கவராக, ஆதரவு தந்து எம்மை அன்போடு வழி நடத்துபவராக, கரிசனையோடு எம்மைக் கண்காணித்துக் காப்பவராகச் செயற்படுகின்றார்.

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி.**

# பொது விளையாட்டு மைதானம் ஒன்றை பெற்றுத் தருமாறு வேண்டுகோள்!

மட்டக்களப்பு இருதயபுரம் கிழக்கு, இருதயபுரம் மத்தி, ஞானசூரியம் சதுக்கம், வீரசிங்க சதுக்கம், கூழாவடி, கூழாவடி கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள இளைஞர் யுவதிகள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் நன்மை கருதி பொது விளையாட்டு மைதானம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு வேண்டுகொள் முன்வைக்கப்பட்டுள்ளது என இருதயபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் லோகிராஜா தீபாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பில் உள்ள மேற்படி 6 கிராம சேவகர் பிரிவுகளும், சுமார் 2500 இற்கு மேற்பட்ட குடும்பங்களையும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட சனத்தொகையையும் கொண்டு அமைந்துள்ளன.

இருந்த போதிலும், நீண்ட காலமாக இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு பொதுவான விளையாட்டு மைதானம் இல்லாதிருப்பது பெருங்குறையாகக் காணப்பட்டுவருகின்றது.

இதனால், இப்பகுதியில் உள்ள இளைஞர், யுவதிகள் தமது விளையாட்டு திறமைகளை வளர்க்க மைதானம் இன்மையால் பெரிதும் மழுங்கடிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே, எமது இளைஞர்கள் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சனி மவுண்ட் விளையாட்டு மைதானமானது ஜெயந்திபுரம் பன்சாலைக்குரிய காணியாக சுவீகரிக்கப்பட்டுவிட்டது.

அதே நேரம் எமது கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தேசிய அரசாங்க மரக்கூட்டுத் தாபனம் அமைந்துள்ள காணியானது பற்றைகள் அடர்ந்து பராமரிப்பற்று காடு மண்டிக் கிடப்பதோடு, டெங்கு பரவும் சூழலுடன் காணப்படுகின்றது.

அதேவேளை, இந்தப் பகுதி பொது மக்களுக்கு எவ்வ கையிலும் பயன்படாததாகவும் காணப்படுகின்றது.

எனவே, மரக்கூட்டுத்தாபனத்தை பொருத்தமான இடத்திற்கு மாற்றியமைப்பதோடு அந்தக் காணியை இப்பகுதி இளைஞர் யுவதிகளின் விளையாட்டு திறமை மேம்படவும் பொதுமக்கள் தமது பொழுதைப் போக்கவும் வயோதிபர்கள் தமது தேகாரோக்கிய பயிற்சியில் ஈடுபடவும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக் கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது தொடர்பாக இருதயபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தால் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், மாநகர ஆணையாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலரிடமும் வேண்டுகோள்களை முன்வைத்துள்ளோம். ஆயினும், இதுவரை பயனேதும் கிட்டவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களை

## மாகாண பொதுச்சேவையில் இணைக்க நடவடிக்கை விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் பெப்ரவரி 28

கொழும்பு, பெப். 21

வடமாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களை மாகாண பொதுச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இந்த மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

ஏற்கனவே, இந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்தினம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் நிறைவடைந்ததைத் தொடந்தது இது நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப்பரீட்சை தொடர்பான இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்று மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களை மாகாண பொதுச்சேவையில் உள்வாங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி க.பொ.த. சாதாரண பரீட்சையில் தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றில் ஏதாவது மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருந்தல் வேண்டும்.

பல்கலைக்கழகம் / பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது உயர் கல்வி அமைச்சு / மூன்றாம் நிலை தொழில்கல்வி அமைச்சு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது சிறுவர் செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதாவதொரு நிறுவனம் ஒன்றிலிருந்து முன்பள்ளிக் கல்வி தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாக டிப்ளோமா சான்றிதழை பெற்றிருந்தல் வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கான வயது எல்லையான 18 தொடக்கம் 40 வயதிற்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுவர் இல்ல முகாமையாளர்களுக்கான இணைப்புக் குழுக் கூட்டம் கல்முனையில்!

அம்பாறை கரையோர பிரதேசங்களிலுள்ள சிறுவர் இல்லங்களின் முகாமையாளர்கள், சிறுவர் தொடர்பாக செயற்படும் அரச உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புகளுக்கிடையிலான இணைப்புக்குழு கூட்டமொன்று கல்முனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மனித அபிவிருத்தி தாபனம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கல்முனை காரியாலயத்தில் அதன் இணைப்பாளர் இஸ்ஸடீன் லத்திப் தலைமையில் இந்தக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, சிறுவர் இல்லங்களில் இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள், தேவைகள், பிள்ளைகளின் கற்றல் கற்பித்தலுக்கான ஏற்பாடுகள், பாதுகாப்பு, பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு, சுகாதார வசதிகள் மற்றும் தொழில் பயிற்சிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அதனை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டமையுடன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும், இக் கூட்டத்தில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், மனித அபிவிருத்தி தாபன உத்தியோகத்தர்கள், சிறுவர் இல்லங்களின் முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மூதூரில் 10 குண்டுகள் மீட்பு



மட்டக்களப்பு, பெப். 21

திருகோணமலை - மூதூர் கிளிவெட்டி பாலத்திற்கு கீழிருந்து 10 குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மில்லிமீற்றர் 40 வகையைச் சேர்ந்த கிரேனெற் லோஞ்சர் ரக சிறிய குண்டுகளே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நேற்றுமுன்தினம் இந்த குண்டுகள் பதுக்கிவைக்கப்பட்டிருந்தமையைக் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குண்டு செயலிழப்பு பிரிவுக்கு வழங்கிய தகவலை அடுத்து அதிகாரிகள் விரைந்து குண்டுகளை செலலிழக்கச் செய்துள்ளனர்.

இந்தக் குண்டுகள் எவ்விதமான நாசகார செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு இங்கு பதுக்கிவைக்கப்பட்டிருந்தன என்ற விடயம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

மேலும், இதுவரை எந்தவொரு சந்தேக நபரும் கைதுசெய்யப்படாத நிலையில் மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆடுகளை திருடியவர் விளக்கமறியலில்

மட்டக்களப்பு, பெப். 21

திருகோணமலை - கந்தளாய்ப் பகுதியில் ஒன் பது ஆடுகளைத் திருடிய நபரை இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபர் கந்தளாய் பிரதேசத்திலுள்ள சீனி ஆலை பகுதியில் ஏழு ஆடுகளையும், கந்தளாய் பெருமாள்மடு பகுதியில் 2 ஆடுகளையும் திருடினார் எனப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் அடிப் படையில் சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# ஈரானிய நாசகாரி போர்க்கப்பல்கள் கொழும்பை விட்டு புறப்பட்டுச் சென்றன

கொழும்பு, பெப். 21

நான்கு நாள்களாக கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற ஈரானிய கடற் படையின் நாச காரிப் போர்க் கப்பல்கள் அணி நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றது.

ஈரானிய கடற்படையின் 50 ஆவது கப்பல்அணியைச்சேர்ந்த ரொன்ப் என்ற விநியோக மற் றும் போர்க்கப்பல், நாசகாரி கப்பல்களான நக்டி மற்றும் பயன்டோர் ஆகியன நான்கு நாள்கள் நல்லெண்ணப் பயண மாக கடந்தவாரம் கொழும்பு வந்தன.

இந்தியப் பெருங்கடல் மற்றும் அனைத்துலக கடலில் தமது பயணத்தின் ஓர் அங்கமாகவே இந்தப் போர்க்கப்பல்கள் அணி கொழும்பு வந்தது.

இதன்போது, இலங்கைக் கடற்படையினர்வரவேற்பு அளித் தலைமையுடன், ஈரானியகடற்படையி னருடன் இணைந்து பல்வேறு நிகழ் வுகளிலும் பங்கேற்றனர்.

நேற்றுமுன்தினம் இந்தப் போர்க்கப்பல்கள் தமது நான்கு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்புத் துறை முகத்தை விட்டு புறப்பட்டுச் சென்றன.





# கைத்தொழில் உற்பத்தி 4 சதவீதம் அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 21

இலங்கையின் கைத்தொழில் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கைத் தொழில் உற்பத்தி நான்கு சதவீதத்திற்கு மேலதிகமான வளர்ச்சியைப் பதிவு செய் திருந்தது.

உருக்கு உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள், அடிப்படை இருப்பு உற்பத்திகள் போன்ற துறை சார்ந்த கைத்தொழில்கள், கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன என தொகை மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கந்தையா நீலகண்டனின் இறுதிக்கிரியை இன்று

கொழும்பு, பெப். 21

இந்துமாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டனின் இறுதிக்கிரியை இன்று மாலை 4 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடை பெறவுள்ளது.



அன்னாரது பூதவு டல் இல.39, ஜோசப் ஒழுங்கை, கொழும்பு-4 எனும் முகவரி யில் உள்ள இல்லத் தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள் ளது.

இன்று பிற்பகல் 3 மணியளவில் கிரியைகள் நிறைவு பெற்று 4 மணியளவில் அன்னாரது பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# 2020 இல் மீன்பிடித்துறையில் 50 ஆயிரம் வேலை வாய்ப்புக்கள்

கொழும்பு, பெப். 21

2020ஆம் ஆண்டளவில் மீன் பிடித்துறையில் புதிதாக 50 ஆயி ரம் வேலைவாய்ப்புக்கள் உரு வாக்கப்படும் என்று மீன்பிடி மற் றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

2016ஆம் மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாத காலப் பகுதிக்குள் எட்டாயிரத்து 562 புதிய வேலை வாய்ப்புக்கள் உரு வாக்கப்பட்டன என அமைச்சின் தேசிய நீரியல் உயிரின விருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.



2020ஆம் ஆண்டளவில் புதிதாக 50 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிக ளும் விருத்தி செய்யப்படும் என் றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# எல்லை நிர்ணயக் குழு தயாரித்த அறிக்கை அமைச்சரிடம் கையளிப்பு!

2017ஆம் ஆண்டு இலக்கம் 17 இன் கீழான மாகாணசபைகள் வாக்களிப்பு (திருத்தம்) சட்டத்திற்கு அமைவாக புதிய கலப்பு வாக்களிப்பு முறை தொகுதிவாரி, எளிமையான பெரும்பான்மை, தனிப்பட்ட பெரும்பான்மை தொடர்பில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதில் தேர்தல் தொகுதிக்காக பன் முகப்படுத்தப்பட்ட முறைக்கமைவாக 50 சதவீத பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

மேலும், 50 சதவீதம் மாவட்ட மட்ட பல்லின பிரதிநிதித்துவ முறை (அதாவது மேலதிக பட்டியல்)அமைவாக தெரிவு செய்யப்படவேண்டும். இதற்கு அமைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 5 உறுப் பினர்களைக்கொண்ட எல்லை நிர்ண யக்குழு ஒன்று நிர்ணயிக்கப்பட்டது.

தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை நிர்மாணிப்பதற்கான அதிகாரம் இதற்கு வழங்கப்பட்டது.

அதிகாரம் வழங்கப்பட்ட நாள் முதல் நான்கு மாத காலப்பகுதிக்குள் இந்தக் குழு தயாரித்த மாகாணசபைகள் வாக்களிப் பிற்கான எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளிக்கப்பட்டது இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.



இந்தக் குழுவின் தலைவர் கலாநிதி கே.தவலிங்கம் ஏனைய உறுப்பினர்க ளான பேராசிரியர் எஸ்.எச். ஹிஸ்புல்லா, கலாநிதி அனிலாடயஸ் பண்டாரநாயக்க, பி.எம். ஸ்ரீவர்த்தன (முன்னாள் மேல திக தேர்தல் ஆணையாளர்) எஸ்.விஜய சந்திரன் (பேராதனைப் பல்கலைக்கழகத் தின் பொருளாதாரம் மற்றும் புள்ளி விவர விஞ்ஞான மதிப்பீடு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் தேசிய பிரசாரத் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, பெப். 21

இலங்கையில் தீவிரமாக வியா பித்து வரும் நீரிழிவு நோயை தவிர்ப் பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய பிரசாரத்திட்டம் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

'நீரிழிவைத் தடுக்க நடப்போம் வாழ்வதற்காக ஓடுவோம்' என்பது இந்தத் திட்டத்தின் தொனிப்பொரு ளாகும்.

இந்தத்திட்டம்பற்றிய விவரங்களை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் நீரி ழிவு சிறப்பு நிபுணருமான டொக்டர் பிரசாத் கட்டுலந்த அறிவித்தார்.

இந்தத் திட்டத்திற்கான பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. திருகோணமலை இந்து கலாசார நிலையத்தில் சுகாதார சிகிச்சை முகாம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து விழிப் புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது.

இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று அதிகாலை ஹபரண சந்தியில் இருந்து மீண்டும் ஆரம்பமாகும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




ஊர்வலம் கடந்து செல்லும் பிரதே சங்களில் இலவச சுகாதார சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும். இதில் நீரி ழிவு, உயர் இரத்த அழுத்தம் போன் றவற்றிற்கான சோதனைகள் நடத் தப்பட்டு இலவச மருத்துவ ஆலோச னைகள் வழங்கப்படவுள்ளன.

# இலங்கையுடன் வர்த்தக ஒப்பந்தம்; தாய்லாந்து ஏற்பாடு

கொழும்பு, பெப். 21

இலங்கையுடனான சுதந் திர வர்த்தக ஒப்பந்தம் ஒன் றில் கைச்சாத்திட எதிர்பார்த் துள்ளதாக தெரிவித்துள்ள தாய்லாந்து அரசு நாடாளு மன்றத்தில் அதற்காக சிறப்பு அனுமதி பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுத் துள்ளது எனக் குறிப்பிட் டுள்ளது.

இது குறித்து தாய்லாந் தின் வர்த்தக செயற்பாட்டு பிரிவின் நிறைவேற்று இயக் குநர் ஒரமன் சப்தவீதும் தெரிவித்துள்ளவை வரு மாறு:-

இலங்கையை தாய்லாந் துடனான தெற்காசியாவின் வர்த்தக பங்காளியாக மாற் றும் நோக்கில் இலங்கையு டன் சுதந்திர வர்த்தக ஒப் பந்தமொன்றை கைச்சாத் திட எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையானது தெற் காசியாவில் குறிப்பிடத்தக் களவு சந்தை வாய்ப்பை கொண்டுள்ளது. அத்தோடு, கடந்த ஐந்து வருடகாலப் பகுதியில் சராசரியாக 6.5 சதவீதம் என்ற ஆரோக்கிய மான பொருளாதார வளர்ச் சியை பதிவு செய்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற தெற்காசிய நாடு களுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளது.

தாய்லாந்தின் வர்த்தக செயற்பாட்டுப் பிரிவின் வல் லுநர்கள் இலங்கையுட னான சுதந்திர வர்த்தக ஒப் பந்தம் தொடர்பில் முழுமை யான ஆய்வை நிறைவுசெய் துள்ளனர்.

ஆனாலும், இலங்கையு டன் இவ் ஒப்பந்தம் தொடர் பான உத்தியோகபூர்வ பேச்சுக்களில் ஈடுபட முன் னர் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறுவதற் கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

சுன்னாகம்,பெப்.21

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கட்டக்குள ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தான நவ கோண சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்த ஆலய மகோற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு, தேர்த்திருவிழாவில் அம்பாள் புதிய நவகோண சித்திர தேரில் வீதியுலா வரவிருக்கி றார். மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ)

# தினசரி ராசி பலன்
(21.02.2018)

2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 9ஆம் நாள் புதன்கிழமை ஷஷ்டித்திதி பி.இ.3.50 மணி வரை பின்னர் ஸ்ப்தமி. நட்சத்திரம்: அசுவினி பகல் 2.01 பின்னர் பரணி மரண யோகம் பகல் 2.01 வரை பின்னர் சுபயோகம்

**ராகுகாலம்** -பகல் 12.24 மணி முதல் 1.52 மணி வரை

**சுபநேரம்** - மாலை4.56 மணி முதல் 6.27 மணி வரை

இன்று ஷஷ்டி விரதம்

**திவசம் செய்ய வேண்டிய திதி**- மாசி மாத வளர்பிறை ஷஷ்டி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** அசுவினி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். புதிய முதலீடு செய்து தொழிலை விரிவுபடுத்துவார்கள். உடல் ஆரோக்கியம் நல்லபடியாகக் காணப்படும்.

**ரிஷபம்** தீமையான நாள். குடும்பத்தில் மற்றவர்களால் குழப்பங்களும், மன வேதனைகளும் ஏற்படும். குடும்ப உறவில் பாதிப்பு ஏற்படும். பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் வரும்.

**மிதுனம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். பொன், பொருள்கள் சேர்ந்து மன நிறைவைத்தரும். வீடு தேடி வாய்ப்பு, வசதிகள் பல வலியவரும். திருமண பாக்கியம் கைகூடும். சமூகத்தில் உயரிய அந்தஸ்து கிடைக்கும்.

**கடகம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். குடும்பத்தில் சிரமங்கள் இருந்தாலும் பாதிப்புகள் குறையும். உடல் நலனில் கவனம் தேவை.

**சிம்மம்** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்பும் பண்பும் காணப்படும். வியாபாரத்தில் மேன்மை, பணப்புழக்கம் அதிகரிக்கும். இதுவரை கோபமாய் இருந்த உறவினர்கள் வலிய வந்து சேர்வார்கள்.

**கன்னி** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். பலவித வழிகளிலும் கஷ்ட, நஷ்டங்கள் உண்டாகும். மாணவர்களின் கல்வித் தேர்ச்சி முயற்சிக்கேற்ப தடைப்படும்.

**துலாம்** சம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன் பட நேரும். இருப்பிடத்தில் பொறுமை காப்பது நல்லது. வியாபாரம் சமநிலையில் நடக்கும்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். உடலிலும், மனத்திலும் உற்சாகம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைவார்கள்.

**தனுசு** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக் கிடைக்கும். சிலருக்கு அரச வழியால் காணி கிடைக்கும்.

**மகரம்** துன்பமான நாள். பணவரவு குறையும். வீண் சச்சரவுகள் உண்டாகும். நெருங்கிய உறவினர் ஒருவரின் துக்க செய்தி கேட்க நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு வீண் அலைச்சல்களும், கடின உழைப்பும் அதிகரிக்கும்.

**கும்பம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரம் நன்கு விருத்தி அடையும். சுயதொழில் மேன்மை அடையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமடைவார்கள்.

**மீனம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். அரசாங்க விஷயங்கள் அனுகூலமாகும். மாணவர்கள் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

**சந்திராட்டமநாள்: உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள் அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# வவுனியா சிங்கள பிரதேச செயலக பிரிவில் சிகரெட் விற்பனைக்கு முற்றாகத் தடை!

கொழும்பு, பெப். 21

சிகரெட் மற்றும் புகையிலை சார்ந்த உற்பத்தி பொருள்களின் விற்பனை முற்றாக நிறுத்த வவுனியா - சிங்கள பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விற்பனை நிலைய உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதனை ஒத்திகை பார்க்கும் விதமாக நேற்று முதல் அந்தப் பகுதியில் பீடி, சிகரெட் புகையிலை மற்றும் புகையிலை சார்ந்த அனைத்துப் பொருள்களையும் விற்பனை செய்வதிலிருந்து விற்பனை நிலைய உரிமையாளர்கள் விலக்கி வைக்கத் தீர்மானித்துள்ளனர்.



மேலும், அதனை மீறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச செயலக பிரிவில் உள்ள விகாராதிபதிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் அனைத்து விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க)

# ஆலய மஹோற்சவங்கள்

பருத்தித்துறை, பெப்.21

பருத்தித்துறை தம்பசிட்டி ஸ்ரீ மஹாமாரி அம்பாள் மாசி மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள மஹாற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முதலாம் திகதி வியாழக்கிழமை உதயத்தில் சமுத்திர தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ)

* * * * *

பருத்தித்துறை, பெப்.21

பருத்தித்துறை தம்பசிட்டி பண்டாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திருவிழாவும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முதலாம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இன்பர்சிட்டி சமுத்திரத் தீர்த்தக் கரையிலும் இடம் பெறும். (இ)

# பெரும்பாலான இடங்களில் தொடர்ந்தும் வறட்சியான காலநிலை !



கொழும்பு, பெப். 21

நாட்டின்பெரும்பாலானஇடங்களில் வறட்சியான காலநிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் காலை மற்றும் இரவு வேளைகளில் குளிரான காலநிலை நிலவக்கூடும்.

நுவரெலியா மாவட்டத்தில் காலைவேளைகளில் உறைபனி காணப்படும்.

ஏனைய பகுதிகளில் காலை வேளைகளில் பனிமூட்டம் நிலவக்கூடும் என்று திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (க)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை–

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்**-தேராவில், இருட்டுமடு, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம், 68வது பிரிவு இராணுவமுகாம், 683வது பிரரிவு இராணுவமுகாம், 18 VIR இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்**-கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், அட்டம்பஸ்கட கிராமம், தவசிகுளம் கிராமம், பண்டாரிக்குளம்கிராமம், கண்ணாட்டிகணேசபுரம், புளிதறித்தபுளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு கிராமம், தாண்டிக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, முள்ளிக்குளம், கீரிசுட்டான், நொதேர்ண்பாம், ஆசிரியர் தொழிநுட்பக்கல்லூரி, புதுக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், பூந்தோட்டம் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்**-கபீப் சிற்றி, முள்ளிக்குளம், கீரிசுட்டான், கங்காணிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும்- மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# ச.ச. நிலைய கட்டட திறப்பு விழா

தொல்புரம் மத்திய சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிலையத்தலைவர்சி.முத்துராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா கட்டடத்தை திரை நீக்கம் செய்யவுள்ளார். நிகழ்வில் பிரதம விருந்தினராக சக்தி கல்வி நிலைய இயக்குநர் நா.இந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ)

# இசையரங்கு

காரைநகர், பெப்.21

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை வியாழக்கிழமை நான்காம் நாள் உற்சவத்தில் மாலை 6.30 மணியளவில் ஆலய பிரதான மண்டபத்தில் கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பக்திரச கீதங்கள் இசை நிகழ்வு பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (இ)

# பெருமை மிகுந்த எம் தாய்மொழிக்கு நிகர் வேறேதுமில்லை

**செல்வி சுபாஜினி குணரட்ணம்,**
*ஆசிரியர், யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி*

ஒரு மனிதன் தன்னுடைய உணர்வுகளை சக மனிதனுக்கு மொழியாலே தெரிவிக்கிறான் எனலாம். அனைத்துலகிலும் உள்ள எல்லா மொழிகளுக்குள், ஒரு தொடர்பை ஏற்படுத்தவும், ஒற்றுமையை வளர்க்கவும், ஆண்டுதோறும் மாசி மாதம் 21 ஆம் திகதி உலக தாய்மொழி தினமாக ஐக்கிய நாடுகள் (ஐ.நா.)சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ நிறுவனம் கொண்டாடிவருகிறது.

ஆரம்பகாலத்தில் ஒரு கட்டத்தில் மனிதனின் வாயிலிருந்து வரும் சத்தம், உடலசைவுகள், நிற்கும் நிலைகள், முகபாவங்கள் போன்ற ஊடகங்களை தொடர்பாடலுக்காக பயன்படுத்தினர். மனிதன் வளர்ச்சியடைந்து வரும்போது ஆரம்ப தொடர்பாடல் பல்வேறு மூலப் பொருள்கள் தொடர்பாடலுக்காக பயன்படுத்தப்பட்டன. குரலை வைத்துக் கொண்டு பலதரப்பட்ட ஒலி வடிவங்களை உருவாக்கியும் தொடர்பாடலை மேற்கொண்டனர்.

இவ்வாறு தொடர்பாடல் வரலாற்றின் அபிவிருத்தியில் பல நிகழ்வுகள் நடந்தேறின. மனிதன் குரலொலி வழியாக தனது குறித்த கருத்தினை வெளிப்படுத்த முயன்று கொண்டதன் பயனாக நாளடைவில் மொழியொன்று உருவாகியது. இவ்வாறு பேச்சு மொழியொன்று தோன்றி தலைமுறை வழியாக வளர்ந்து கொண்டே சென்றது. உலகின் பலபாகங்களிலும் பல்வேறுபட்ட மனித குழுக்கள் வாழ்கின்றமையால் பல்வேறு மொழிகளைப் பயன்படுத்துவதற்கு வழிகோலியது.

> ஒருமொழி அழிந்தால் அதன் பண்பாடு, கலாசாரம், இலக்கியம், நாகரிகம் ஆகியவையும் அழிந்துவிடும். உலகில் பேச்சு வழக்கில், ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. உலகில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன என்கிறார்கள்.

**தாய்மொழி தினம் தொடங்கிய வரலாறு**

பாகிஸ்தான் அரசு 'உருது' மொழியை அலுவலக மொழியாக 1946 இல் அறிவித்தது. அன்றைய கிழக்கு பாகிஸ்தானில் (தற்போது வங்கதேசம்) உருது மொழிக்குப் பதிலாக, வங்க மொழியை ஆட்சி மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்று பெரும்பான்மை மக்கள் 1952 ஆம் ஆண்டு கோரிக்கை விடுத்தனர். அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனைத்தொடர்ந்து கிழக்கு பாகிஸ்தானில் பெரும்பான்மையாக இருந்த வங்காளிகள், வங்க மொழியையும் தேசிய மொழியாக அறிவிக்க வேண்டும் என்று போராட்டத்தில் இறங்கினர்.

டாக்கா பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்லூரி, மருத்துவக்கல்லூரி மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் மாணவர்கள், இந்தப் போராட்டத்தை தலைமையேற்று நடத்தினர். தாய்மொழி காக்க திரண்ட மாணவர்கள் மீது பாகிஸ்தான் அரசு துப்பாக்கிச் சூடு நடத்தியது. இச்சூட்டுச் சம்பவத்தில் நான்கு மாணவர்கள் உயிரிழந்தனர். ஆயினும் பொதுமக்கள், இளைஞர்கள் போராட்டத்தை தீவிரப்படுத்திக் கொண்டிருந்தனர். இறுதியாக உருது மற்றும் வங்காளம் ஆகிய இரு மொழிகளும், அலுவலக மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக பாகிஸ்தானில் இருந்து கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து வங்காளதேசம் உருவானது.



வங்க மொழி காக்க உயிர் நீத்த மாணவர்களின் நினைவு நாளான, மாசி 21 ஆம் திகதி உலக தாய்மொழி நாளாக கொண்டாட வேண்டும் என, வங்கதேசம், 28 நாடுகளின் ஆதரவுடன், ஐ.நா., சபையில் கோரிக்கை முன்வைத்தது. அக் கோரிக்கை ஏற்கப்பட்டது. பலியான அந்த மாணவர்களின் நினைவாக, கலாசார பன்மைத்தன்மை, பன்மொழி ஆர்வம் மற்றும் மொழித்திறனை ஊக்குவிக்கும் நோக்கத்தில், யுனெஸ்கோ நிறுவனம், 1999 ஆம் ஆண்டு கார்த்திகையில், உலக தாய்மொழித் தினத்தை அறிவித்தது.

அன்றிலிருந்து (2000ஆண்டிலிருந்து) ஆண்டுதோறும் உலக தாய்மொழித் தினம், மாசி 21 இல் சிறப்பிக்க கொண்டாடப்படுவருகிறது. 2008 ஆம் ஆண்டு சர்வதேச மொழிகளின் ஆண்டாக அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**ஓர் இனத்தின் அடையாளம் மொழி:**

ஒருமொழி அழிந்தால் அதன் பண்பாடு, கலாசாரம், இலக்கியம், நாகரிகம் ஆகியவையும் அழிந்துவிடும். உலகில் பேச்சு வழக்கில், ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. உலகில் 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன என்கிறார்கள்.

அவற்றில் 1,500 மொழிகள் ஆயிரம் பேருக்கு கீழ் பேசுபவை. 3 ஆயிரம் மொழிகள் பத்தாயிரம் பேருக்கும் குறைவானோர் பேசுபவை எனவும் கூறப்படுகிறது. இன்று மொழிகள், தாய் மொழி, தேசிய மொழி, தொடர்பு மொழி என 3 விதமாக உள்ளன. பேச்சு வழக்கைத் தாண்டி, கல்வியிலும் மொழிகள் சேர்க்கப்பட வேண்டும் என யுனெஸ்கோ வலியுறுத்துகிறது.



இது கிராமம், மாவட்டம், மாகாணம், மாநிலம், நாடு, கண்டம் என வேறுபடுகிறது. ஒவ்வொரு பகுதி மக்களுக்கும், ஒரு தாய்மொழி இருக்கும். இவற்றின் தனித்தன்மை, பண்பாட்டை பாதுகாக்கும் நோக்கிலும், அவற்றுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கி லும் ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் 21 ஆம் திகதி, சர்வதேச தாய்மொழி தினம் கடைபிடிக்கப்படுகிறது.

**தாய்மொழி எம் இருப்புக்கு அவசியம்:**

எமது மொழியின் பிறப்பிடம் எது என அலசினால் அது தாயின் கருவறைதான் என கூறிவிடலாம். கருவறை இருளில் கண்கள் மூடியிருக்கும் கருக்குழந்தை, தாயுடன் பேசுபவர்களின் குரலை, சூழ்ந்து ஒலிக்கும் ஒலிச்சத்தங்களை ஒவ்வொரு கணமும் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. என்கிறார்கள் கற்றுத்தேர்ந்தவர்கள். மனிதனின் அடையாளம், அவனது தாய்மொழிதான். மொழி மனித நாகரிகத்தின் ஒரு கூறு. நாகரிக வளர்ச்சி பெற்ற மனிதன், மொழியை உருவாக்கித் தன் கருத்துகளைப் பரிமாற்றம் செய்ததைக் காண்கிறோம்.

மொழி அறியப்பட்ட பின்னரே பல்வேறு வளர்ச்சியும் கிளர்ச்சியும் மனித நாகரிகத்தில் உருவானது. தொடக்கக் காலத்தில் மொழியானது தொடர்புக் கருவியாகவே இருந்தது. காலப் போக்கில் மொழியானது தொடர்புக் கருவியாக மட்டுமில்லாது வாழ்வியல் கூறாகவே மாறிவிட்டது. மொழியெல்லாம் ஒரு சிக்கலா என்று இன்றைக்கு பலபேர் கேட்கலாம். ஆனால், மொழி தேசங்களை கூறு போடும் வல்லமை படைத்தது என்பதே நாமறிந்த உண்மை.

தாய்மொழி, தேசிய மொழி மற்றும் தொடர்பு மொழி என்னும் மூன்று விதமான மொழிகள், ஒருவருக்கு தெரிந்திருந்தால், எங்கு வேண்டுமானாலும் வாழ்வதற்கு துணையாக இருக்கும் என அறிஞர்கள் கூறுவர்.

தாய்மொழி என்பது வெறும் கருவி இல்லை ஓர் இனத்தின் பண்பாடு, கலாசாரம், வாழ்க்கைமுறை, சிந்தனை எல்லாவற்றிலும் முக்கிய பங்காற்றிக் கொண்டிருக்கும் சிறப்பு தாய்மொழிக்கு உண்டு. தாய் மொழியை பிழையறப் பேசவும் எழுதவும் தெரியாமல் இளைய சமுதாயத்தை வளர்த்து விடுகிறோம் என்பது இன்று வேதனைகலந்த உண்மை.

உலகில் அதிக இலக்கிய நோபல் பரிசுகளை அள்ளி இருக்கும் பிரான்ஸ் நாட்டு மக்கள் பிரெஞ்சு மொழியில் பேசுவதை பெருமையாக நினைப்பவர்கள். ஆங்கில மொழியின் சொற்கள் தங்களுடைய மொழியில் கலக்கக்கூடாது என்று சட்டமியற்றுகின்ற அளவுக்கு தாய் மொழிப் பற்று கொண்டவர்கள்.

சூடான் நாட்டில் தூய தாய் மொழியில் மட்டுமே பேசுவார்கள். ஆங்கில வார்த்தையின் கலப்பைக்கூட பார்க்க முடியாது. வங்காளதேச நாட்டில் உலக தாய்மொழித்தினம் கடைப்பிடிப்பதற்காக அன்றைய தினம் விடுமுறை என அறிவிக்கப்பட் டுள்ளது.

**தாய்மொழி கல்வி:**

ஒருவரின் அறிவு வளர்ச்சிக்கு தாய் மொழிக் கல்வி என்பது மிகவும் அவசியமாகும். அறிவியலில் அதிகபட்ச நோபல் பரிசை பெற்றவர்கள் எல்லாம் தங்களின் தாய்மொழியில் பயின்றவர்களே. இந்தியாவின் மிகச்சிறந்த அறிவியல் மேதைகளும் தாய்மொழி வழிக்கல்வியே தேவை என்று வலியுறுத்தினார்கள். ஜப்பான், ஜேர்மனி, சீனா போன்ற நாடுகள் தொழில் வளர்ச்சியில் மேலோங்கி இருப்பதற்கு முக்கிய காரணம், அவர்களின் சொந்த தாய் மொழியில் கல்வி கற்பது மட்டுமே என்று உலக வரலாற்றில் பொன்னெ முத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. தாய் மொழிக் கல்வியை ஊக்குவிக்கும் நாடுகள் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளாகத் திகழ்கின்றன.

எத்தனை மொழிகள் படித்திருந்தாலும், காதலையும், வேதனையையும் தாய்மொழியில் தான் முழுமையாகச் சொல்ல முடியும். ஆபத்து சமயத்தில் தானாக வருவது தாய்மொழிதான். மொழி அழிந்தால், அந்த இனமே அழிந்துவிடும். மென்மையான உறவு களைச் சொல்வது, தகுதியான சொல்லை வெளியிட முடிவது, தாய்மொழியில் தான்.

தாய்மொழியில் சிந்திப்பவர்களே, உயர்வடைவர். நாம் ஒவ்வொருவரும் எம் தாய்மொழியைப் போற்றி பாதுகாக்க உலக தாய்மொழி தினமான இன்று உறுதி மொழி ஏற்று செயல்படுத்த முனைவோம். ★



# காவிரி தீர்ப்பு; ஏமாற்றமும் நம்பிக்கையும்!



காவிரி நதி நீர்ப் பகிர்வு தொடர்பாக30ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு தமிழக விவசாயிகளிடையே ஏமாற்றத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆறு வார காலத்துக்குள் மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும் எனும் உத்தரவு தமிழகத்துக்கு மகிழ்ச்சி அளித்தாலும், நடுவர் மன்றத்தால் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நீரில் 14.75 டி.எம்.சி.யைக் குறைத்திருப்பது தமிழக விவசாயிகளிடம் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதேசமயம், இந்தத் தீர்ப்பாவது முறையாகச் செயற்படுத்தப்பட வேண்டும் என்று காத்திருக்கிறார்கள் டெல்டா பகுதி விவசாயிகள்.

1983 இல் காவிரி தண்ணீருக்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது டெல்டா விவசாயிகள்தான். 19 ஆண்டுகள் தொடர்ந்த 21 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில்முடிந்தமையைய டுத்தே தன்னையும் அந்த வழக்கில் சேர்க்குமாறு மனு கொடுத்தது தமிழக அரசு. 1990 இல் நிறுவப்பட்ட காவிரி நடுவர் மன்றம் 17 ஆண்டுகள், 568 அமர்வுகளுக்குப் பிறகு 2007 பெப்ரவரி 5-ல் இறுதித் தீர்ப்பை வழங்கியது. தமிழகத்துக்கு 419 டி.எம்.சி., கர்நாடகத்துக்கு 270 டி.எம்.சி. கேரளத்துக்கு 30 டி.எம்.சி., புதுவைக்கு 7 டி.எம்.சி. என்று ஒதுக்கியது. தமிழகத்துக்குரிய 419 டி.எம்.சி.யில் மழைப் பொழிவின் மூலம் கிடைக்கும் அளவு கழிக்கப்பட்டு, 192 டி.எம்.சி.யானது.

இந்த நீரின் அளவைத்தான் தற்போது 177.25 டி.எம்.சி.யாகக் குறைத்திருக்கிறது உச்ச நீதிமன்றம். அதைப் போல, பெங்களூருவின் குடி தண்ணீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு 14.75 டி.எம்.சி. கூடுதலாக வழங்கப்படுகிறது. இதுவரை நிலுவையில் இருந்த அனைத்து காவிரி நதிநீர் வழக்குகளும் இந்த உத்தரவின் மூலம் முடித்து வைக்கப்படுகின்றன. அடுத்த 15 ஆண்டுகளுக்கு இந்தத் தீர்ப்பு அமுலில் இருக்கும். மேல் முறையீடு செய்ய முடியாது.

காவிரி கர்நாடகத்தில் உற்பத்தியானாலும், அதன் மூலம் கடந்த 2,000 ஆண்டுகளாக நெல் சாகுபடி செய்வது தமிழகம்தான். நதி உற்பத்தியாகும் மாநிலம் அல்லது நாட்டைவிட அதைப் பயன்படுத்துவோருக்கே அதிக உரிமை எனும் சர்வதேச நடைமுறையை இத்தீர்ப்பு ஏனோ கவனத்தில் கொள்ளவில்லை.

இந்தத் தீர்ப்பை மத்திய அரசு ஒரு படிப்பினையாகக் கொள்ளவேண்டும். குறிப்பாக, காங்கிரஸும் பா.ஜ.க.வும் தொடக்கம் முதலே காவிரி நதிநீர்ப் பங்கீட்டை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதவில்லை. வாக்குப் பிரச்சினையாகவே கருதிவந்திருக்கின்றன. விளைவாக, இன்று அந்தக் கட்சிகளே நினைத்தாலும் காவிரி பிரச்சினையில் ஒரு சுமுகமான தீர்வை அளிக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இந்நிலை இனி மேலும் தொடரக்கூடாது. நதிகள்தான் இந்தியாவின் ரத்த நாளங்கள்.

எனவே, நதிநீர் பங்கீடு விஷயத்தைக் கவனமாகக் கையாள வேண்டியது மத்திய அரசின் கடமை. தமிழக அரசும் இவ்விடயத்தில் உறுதியுடன் செயற்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் 50 உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற அ.தி.மு.க, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குப் போதிய அழுத்தம் தர வேண்டும். தமிழக விவசாயிகளின் கடைசி நம்பிக்கை தகர்ந்துபோக ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது!

**நன்றி: தஇந்து**









சாவகச்சேரி மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களும் மாணவர்கள் 11 பேருக்கு சைக்கிள்களும் அன்பர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

கனடா பழைய மாணவர் சங்கத்தினரால் மாணவர்களுக்கு சைக்கிள்களும், பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தினரால் 35 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான பளு தூக்கல் உபகரண தொகுதியும் மற்றும் ஞாபகார்த்த உதவிப் பொருளாக அன்பர் ஒருவரால் 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான கரப்பந்தாட்ட உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இவற்றினை கனடா – மீசாலை மக்கள் ஒன்றியத் தலைவர் ச.விநாயகமூர்த்தி, பிரான்ஸ் பழைய மாணவர் சங்க உறுப்பினர் ராஜ்குமார் ஆகியோர் பாடசாலை அதிபர் சு.சிவானந்தனிடம் கையளித்தனர். (இ-21)





வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சி. கா. செந்திவேல் அவர்களால் எழுதப்பட்ட ‘வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை’ அரசியல் விமர்சன பகுப்பாய்வு நூலின் அறிமுக நிகழ்வின் காட்சிகள்.









யா /மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய வீதியில் நடைபெற்றது. அதில் சில காட்சிகள். (இ)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.
கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது.
'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# "எந்தை அடி போற்றி"



உலகம் விசித்திரமானது. அந்த விசித்திர உலகின் விதிகளை, இறைவனை அன்றி வேறு யாரும் அறிய முடியாது. அவ் உண்மையை என் வாழ்வில் பலதரம் உணர்ந்திருக்கிறேன். தேவதூதர்கள் போல எங்கெங்கோ இருந்துவந்து, எனது வாழ்வை உயர்த்தியோர் பலர். அவர்களுள் ஒருவர் தான் சிவராமலிங்கம் மாஸ்ரர். ஒரு தந்தையாய் என்னை நேசித்து வளர்த்தவர். என் நெஞ்சத்து நிமிர்விற்கு வித்திட்டவர். நினைவுப் பறவை சிறகடிக்கத் தொடங்கினால், மாஸ்ரர் பற்றிய பல எண்ணங்கள் விண்ணளவு விரியும். அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரையில் பதிவு செய்கிறேன்.

* * *

யாழ். இந்துவில் நான் சேர்ந்த பொழுது, பலவிதமான தனித் தன்மைகளோடு ஆசிரியர் பலர் அங்கிருந்தனர். ஒருவர், 'கோட்' போட்டுக்கொண்டு தான் தினமும் கல்லூரிக்கு வருவார். மற்றொருவர், காக்கித் தொப்பியணிந்து வருவார். இன்னொருவர், கால் வரை தொங்குமாற்போல், கழுத்தைச் சுற்றி சால்வை அணிந்து கைவீசி நடந்து வருவார். இப்படிப் புறவடிவில் மட்டுமன்றி, அக இயல்பிலும் தனித்தன்மையுடன் வேறுபட்டிருந்த பல ஆசிரியர்களைக் கண்டு, ஆச்சரியப்பட்டிருந்த வேளையிற்தான், முதன்முதலாய் அங்கு சிவராமலிங்கம் மாஸ்ரரைச் சந்தித்தேன். பருமனான தோற்றமும், முகம் நிறைந்த சிரிப்புமாய், ஒரு கையில் தடி ஊன்றி, மறுகையால் ஒரு மாணவனைப் பிடித்தபடி, ஊனமுற்ற காலை வீசி வீசி அவர் நடந்து வந்த தோற்றம் கண்டு எனக்குப் பெரிய இரக்கம் ஏற்பட்டது. இவ்வளவு பெரிய கல்லூரியில், ஊனமுற்ற இவர் எப்படிக் கற்பிப்பார்? என நினைந்தேன். அவரின் ஊனம் நினைந்து இரங்கி, அவரைச் சேர்த்திருப்பார்கள் எனக் கருதினேன். நடக்கவே மாணவர்களின் துணை வேண்டி நிற்கும் இவரால், மாணவர்களை வழி நடத்த முடியுமா? என எண்ணினேன். ஆனால், என் எண்ணங்கள் எல்லாம் பிழையானவை என்பதை, பின்னர் அறிந்து கொண்டேன்.

* * *

நான் எட்டாம் வகுப்பில் இருந்த போது, ஒரு நாள் ஆசிரியர் வராததால் எங்கள் வகுப்பை நூலகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அந்தப் பாடம் முடிந்து மணியடித்ததும், மாணவர்களைப் பிரார்த்தனை மண்டபத்தின் பின்பக்கம் வழியாக, வரிசையாக அனுப்பி வைத்தனர். நான் பிரார்த் தனை மண்டபத்தைக் கடக்கும் போது, அங்கு 'ஏ.எல்' மாணவ ஒன் றியத்தின் கூட்டமொன்று நடந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில், சிவராமலிங்கம் மாஸ்ரர் பேசிக் கொண்டிருந்தார். அன்று தான் அவரது விஸ்வரூபத்தினை முதன் முதலாகக் கண்டேன். கம்பீரமான, தெளிவான, உறுதியான பேச்சு. ஒரு கையை மேசையில் ஊன்றியபடி ஊனம் தெரியாமல் நிமிர்ந்து நின்று, அற்புதமாய்ப் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசிய விடயம் கூட இன்றும் நினைவிலிருக்கிறது. மகாபாரதம் சம்பந்தமான விடயம் அது. தூதுவந்த வீமனின் புதல்வனான கடோற்கஜனை, துரியோதனன் அரக்கன் என்று ஜாதி சொல்லி இழிவுபடுத்துகிறான். அதனாற் பதற்றமடையாத கடோற்கஜன், தன்னைக் கீழ் ஜாதியாக ஒத்துக்கொண்டு, துரியோதனர்கள் பஞ்சபாண்டவர்களுக்கு இயற்றிய, இழிவுகளையெல்லாம் வரிசைப்படுத்தி இச்செயல்களெல்லாம் உங்களைப் போன்ற உயர் ஜாதியினர்க்கே ஆகும் ஐயா! என்று, தூக்கியெறிந்து பேசும் பேச்சினை அன்று அவ்வளவு அழகாக ஆசிரியர் உரையாற்றிக் கொண்டிருந்தார். நான் மயங்கிப் போனேன். பின்வந்த மாணவர்கள் எல்லாரும் என்னை முந் திச்செல்ல, நான் என்னை மறந்து அதே இடத்தில் ஸ்தம்பித்து நின்றேன். ஊனமுற்று இரக்கத்திற்குரியவராய் என் மனதில் பதிந்த அவர், நேர்மாறாய் மற்றவர்களை விடக்கம்பீரமானவராய் அன்று என் மனதில் பதிந்தார்.

* * *

அந்தச்சம்பவம் நடந்து பல ஆண்டுகள் கழிந்த பின்னர் தான், நான் மாஸ்ரரை அணுக முடிந்தது. 'ஓ.எல்' தகுதியின்மையால், கல்லூரியை விட்டு வெளியேறி பின்னர் 'ஏ.எல்' வகுப்பில் சேர்ந்து, எனது பேச்சுத்திறமையை வெளிப்படுத்தி, கல்லூரியில் எனக்கு ஒரு முகத்தினை உருவாக்கிய பின்னர் தான், மாஸ்ரரோடு நான் நெருங்கினேன். 'ஏ.எல்' வகுப்பில் இணைந்த பிறகு, முதன்முதலாக, எங்கள் உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியத்தில், பேசுகிற வாய்ப்பு வந்தது. இந்துக் கல் லூரியில் முதன்முதலாகப் பேசப் போகிறேன் என்ற பதற்றம் எனக்கு. அங்கு முதன்முதலாக யார் என்னைப் பேச்சினால் ஈர்த்தாரோ அவரிடமே சென்று ஆசி பெற்றுப் பேச வேண்டு மென நினைத்தேன். மாஸ்ரரை அணுகப் பயமாக இருந்தது. அவரைச்சூழ எப்பொழுதும் யாராவது இருந்து கொண்டே இருப்பார்கள். நெடுநேரம் காத்திருந்து, அவர் தனித்தபோது, அவரது காலில் விழுந்தேன். அவருக்கு ஆச்சரியம்! ''என்னடாப்பா? என்னடாப்பா?'' என்று வியந்து கேட்டார். ''இன்று முதன் முதலாக இந்துக் கல்லூரியில் பேசப் போகிறேன். பயமாக இருக்கிறது. எனக்கு ஏதாவது ஆலோசனை சொல்லி வாழ்த்துங்கள்!'' எனக் கேட்டு நின்றேன். முகம் மலரச் சிரித்தார். பின், என் முதுகில் தட்டி, ''முன்னுக்கு இருக்கிறவங்கள் எல்லாம் முட்டாள்கள் என நினைத்துக் கொண்டு பேசு! பேச்சுத்தானாக வரும்'' என்று மிகச் சாதாரணமாகச் சொல்லி விட்டு, என் தலை தடவி வாழ்த்தி, ''நிகழ்ச்சியைப் பார்க்க நானும் வருவேன்'' என்றார். சொன்னது போலவே, வந்தார்!

* * *

அன்று எனது பேச்சைக் கேட்டு அவருக்கு ஆனந்தம். ''இவன் ஆரடா ஒருத்தன்? 'ஹிண்டுக் கொலிஜுக்கு' வந்து அம்பிட்டி ருக்கிறான்'' என்று மற்றவர்களிடம் சொல்லி அவர் ஆனந்தப்பட்டதாய் அறிந்து மகிழ்ந்தேன். அதற்குப் பிறகும் கண்டால், முகம் தெரிந்து சிரிக்குமளவிலேயே, அவருக்கும் எனக்குமான தொடர்பு நீண்டது. அந்த ஆண்டு மாகாண அளவில் நடந்த பேச்சுப் போட்டிக்காக நான் பேசப்போனேன்.

* * *

மாஸ்ரர் தான் நடுவராக இருந்தார். உடன் தரப்படும் தலைப்பில் பேச வேண்டும். ஆலயங்களில் பேசிய முன் அனுபவத்தாலும், உயர்ந்தோர்களது நூல்கள் பலவற்றை வாசித்த அனுபவத்தாலும், அக்காலப் பெரும் பேச்சாளர்களின் பேச்சுகளைக் கேட்ட, அனுபவத்தாலும் எனக்குத் தரப்பட்ட இலக்கியத் தலைப்பில், அன்று நல்லபடி பேசினேன். நான் பேசத் தொடங்கியதும் கண்களை மூடிக் கொண்ட மாஸ்ரர் பேசி முடிந்ததுந்தான் கண்களைத் திறந்தார். அவர் கண்கள் கலங்கியிருந்தன. என்னைப் பாராட்டுவார் என எதிர்பார்த்தேன். ஒன்றும் பேசவில்லை. நான் சென்ற பிறகு மற்றவர்களிடம் ''கண்ணை மூடிக் கொண்டு கேட்க, கி.வ.ஜ. பேசியது போல் இருந்தது. இவன், கல்லூரிக்குப் பேர் தேடித் தருவான்'' என்று மகிழ்ந்து சொன்னாராம். அதற்குப் பிறகு தான் மாஸ்ர



# உன்னைச் சரணடைந்தேன்

ரோடுநெருங்கினேன்.

* * *

தமிழ் படித்தவர்கள் பெரும்பாலும் கற்பனையிலேயே காலந் தள்ளுவார்கள். யதார்த்தத்தை என்றைக்குமே தொடமாட்டார்கள். ஆனால், மாஸ்ரர் அந்த வரைவிலக்கணத்துக்கு உட்படாமல் இருந்தார். தமிழிலும் சைவத்திலும் அவர் வைத்திருந்த பற்றுக்கு ஓரளவில்லை. ஆனால், என்றைக்குமே அதை மிகைப்படுத்திக் காட்டமாட்டார். சைவத்தைத் தான்தான் காப்பாற்றுவதாய் நினைக்கமாட்டார். சுவாரசியமான ஒரு சம்பவம் சொல்கிறேன்.

* * *

நாங்கள் 'ஏ.எல்' வகுப்புப் படித்த போது விஞ்ஞான மாணவர் ஒன்றி

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 102

யம் என்ற ஒன்று இயங்கி வந்தது. ஒருநாள், அந்த ஒன்றியத்தினர், எங்களுடைய பிரார்த்தனை மண்டபத்தில், ஓர் ஆங்கிலச் சினிமாப் படம் காட்ட ஒழுங்கு செய்திருந்தனர். பிரார்த்தனை மண்டபத்தில் சுவாமி வைத்திருந்த பெரிய பீடத்தின் முகப்பில், ஓர் திரையைக் கட்டி (அப்போதெல்லாம் ரீ.வீ. வந்திருக்கவில்லை) அதிற்தான் படம் காட்டினர். அந்த ஆங்கிலப் படத்தில், ஒரு படுக்கையறைக் காட்சியும் வந்தது. தமிழ், சமயம் என்று திரிந்த எங்களில் சில பேருக்குக் கடுங்கோபம். எங்களின் சமயப் பற்றைக் காட்ட, நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாய் நினைத்தோம். ''சாமிப் பீடத்தின் முன் திரை கட்டி, படுக்கையறைக் காட்சிகளை எப்படிப் போடலாம்?'' என, அந்த ஒன்றிய மாணவர்களுடன் கடுமையாய்ச் சண்டை பிடித்தோம். சண்டை முற்றியதும், பிரச்சினையை மாஸ்ரரிடம் கொண்டு சென்றோம். விசயம் தெரிந்ததும், மாஸ்ரர் கடுமையாகக் கோபிப்பார், அந்த ஒன்றியத்தினரை திட்டுவார் என்று, எதிர்பார்த்துப் போன எங்களுக்கு பெருத்த ஏமாற்றம். விசயத்தைக் கேட்ட பிறகு, மாஸ்ரர் வாய் விட்டுச் சிரித்தார். பிறகு, அந்த ஒன்றிய மாணவர்களை, ''சரி சரி, நீங்கள் போங்கடாப்பா!'' என்று சாதாரணமாக அனுப்பி வைத்தார். எங்களுக்கோ கோபமான கோபம். அந்த மாணவர்கள் போன பிறகு, ''எப்படி அவர்களை நீங்கள் ஒன்றும் சொல்லாமல் விடலாம்? அவர்கள் செய்தது சரியான வேலையா? சாமிக்கு முன்னால் திரைகட்டி, இப்படிப்பட்ட படங்களை போடலாமா?'' என்று, உரத்துப்பேசி எங்கள் கோபத்தை வெளிப்படுத்தினோம். மாஸ்ரரின் முகத்தில் சிரிப்பு மாறவேயில்லை. ''டேய்! டேய்! இதையெல்லாம் பெரிசு படுத்தாதீங்கடாப்பா! இந்த வயசில இப்பிடிப் படம் பாக்கப் பெடியளுக்கு விருப்பமாத்தான் இருக்கும். ஒன்ற வடிவா விளங்குங்கோ! கடவுள யாராலயும் மாசு படுத்த முடியாது. இப்பிடிச் சின்ன விசயங்களப் பெரிசு படுத்தினால் பெடியளுக்குச் சமயத்தில தான் வெறுப்பு வரும்.'' என்று சொல்லிவிட்டு, ''சரி சரி, அந்தப் படம் ஓடேக்க நீங்களும் எல்லாம் பார்த் துக் கொண்டு இருந்த னீங்கள் தானே! அப்ப ஏன் அந்தப் படத்த நிப்பாட்டேல?'' என்று கேட்டுப் பெரிதாய்ச் சிரித்தார். மற்றவர்கள் என்ன நினைத்தார்களோ, என்னைப் பொறுத்தவரை, அன்று எனது அறிவை மூடிப் போர்த்திருந்த பொய்ச் சட்டை ஒன்று கழன்று போனது மட்டும் சத்தியமான உண்மை.

* * *

(தொடரும்...)

# சர்வ மதத் தலைவர்களின் பங்களிப்புடன் போதைப்பொருளை கட்டுப்படுத்த திட்டம்

கொழும்பு, பெப். 21

நீர்கொழும்பு பிரதேசத்தில் தீவிரம் பெற்றுவரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பெரிய திட்டம் அமுலாகிறது.




கொழும்பு மறைமாவட்ட பேராயர்பேரருட்திரு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வழிகாட்டலின் கீழ் பிரதேச சமயத்தலைவர்களின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் அமுலாக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பெரும் நடைபவனி ஏற்பாடாகியுள்ளது. இந்த நடைபவனி பிற்பகல் 3 மணிக்கு நீர்கொழும்பு மாரிஸ்ஸ்ரெலா கல்லூரிக்கு அருகில் இருந்து ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீர்கொழும்புப் பிரதேசத்தில் இனிப்புப் பண்டங்களில் போதைப் பொருளை மறைத்து வைத்து மாணவர்கள் மத்தியில் விநியோகிக்கும் முயற்சி பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

இத்தகைய முயற்சிகள் மூலம் மாணவர்களை போதைப் பழக்கத்திற்கு அடிமையாக்கும் திட்டங்கள் நாடெங்கிலும் பரவி வருவதாக சங்கைக்குரிய களுவாராச்சிகம சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கருத்துவெளியிட்டார்.

இதன்போது, போதைப் பொருள் அரக்கனிடம் இருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு பெற்றோரிடம் உள்ளது என ராஜேந்திரக் குருக்கள் குறிப்பிட்டார்.

இதேவேளை, போதைப் பொருளின் அழிவுதரும் போக்குப் பற்றி இளம் தலைமுறை மத்தியில் விளக்கிக்கூற வேண்டும் என மௌலவி மொஹமட் அஸ்வின் அங்கு தெரிவித்தார்.

(க)

## ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள் ஏன் சபைக்கு வரவில்லை?

### திலங்க சுமதிபால விளக்கம்

கொழும்பு, பெப். 21

உயர் நீதிமன்றத்தின் விளக்கம் வரும் வரையில் நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையைப் பேணுவதற்காக தேசிய அரசுடன் ஒத்துழைப்பு வழங்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களிடம் ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளையடுத்தே நாடாளுமன்றத்திற்கு நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப் பினர்கள் எவரும் வருகைதரவில்லையென பிரதி சபாநாயகரும் ஸ்ரீ ல.சு.க. உறுப்பினருமான திலங்க சுமதிபால தெரிவித்தார்.



ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது தேசிய அரசிலிருந்து நீங்குவதற்கு முடியுமா? என வினவியுள்ளனர். இதற்கு ஜனாதிபதி அரசமைப்பு தொடர்பில் விளக்கம் பெற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டது. சட்டமாஅதிபர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரு மாறு கேட்டுக் கொண்டுள்ளார். அதை அடுத்து நீதிமன்றத்திடம் விளக்கத்தை ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையில் அவகாசம் வழங்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். அதன் பிரகாரமே நேற்று முன்தினம் ஐ.ம.சு.மு.யின் உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

உயர் நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையில் தாம் ஓரணியாக நின்று ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஐ.ம.சு.மு.யில் அரசுடன் உள்ளவர்கள் தீர்மானித்துள்ளனர். இதனாலேயே நேற்று முன்தினம் சபைக்கு அவர்கள் சமுகமளிக்கவில்லையெனவும் பிரதி சபாநாயகர் திலங்க சும திபால குறிப்பிட்டுள்ளார்.

## வெல்லவாய பகுதியில் காட்டுத் தீ; 100 ஏக்கர் தீயில் கருகி பெரு நாசம்

கொழும்பு, பெப். 21

வெல்லவாய, வதிஹெ லயாய மலைப்பகுதியில் பரவிய காட்டுத் தீயினால் சுமார் 100 ஏக்கர் காட்டுப் பகுதி தீக்கிரையாகியுள்ளது.



நேற்று முன்தினம் நண் பகலில் இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் மாலை வரையில் 100 ஏக்கர் பகுதி தீக்கிரையாகியுள்ளது என குறிப்பிடப்படுகிறது.

தீயைக் கட்டுப்படுத்த அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## பொதுநலவாய ஒன்றிய போட்டிக்கு இலங்கை நீச்சல் வீரர்கள் தெரிவு

கொழும்பு, பெப். 21

ஆஸ்திரேலியாவில் கோல்ட் கோஸ்ட் என்ற நகரில் நடைபெறவுள்ள பொதுநலவாய ஒன்றிய நாடுகளின் விளை யாட்டு விழாவில் கலந்து கொள்ளும் இலங்கை நீச்சல் அணிக்கான வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Gold Coast 2018
XXI Commonwealth Games
QUEENSLAND

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள இந்தப் போட் டியில் நான்கு நீச்சல் வீரர்களும் இரண்டு வீராங் கனைகளும் பங்குகொள்ளவுள்ளனர்.

சமீபத்தில் சர்வதேச நீச்சல் போட்டிகளில் விசேட ஆற்றல்களை வெளிப்படுத்திய கிம்கோ கிமிக்கோ ரஹிம் மற்றும் மினோலி களுவாராச்சி ஆகிய வீராங்கனைகளும் சரந்த சில்வா, மத்தியூ அபேசிங்க, கையில் அபேசிங்க, அகலங்கா பீரிஸ் ஆகிய வீரர்களும் இப்போட்டியில் கலந்துகொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(க)

## இலங்கையில் செயற்கை மழை!

கொழும்பு, பெப். 21

இலங்கையில் செயற்கை மழையை ஏற்படுத்துவதற்காக இலங்கை வந்துள்ள தாய்லாந்து தொழில்நுட்ப நிபுணர் குழு நேற்று தமது பணிகளை ஆரம்பித்துள்ளது.

இவர்கள் நேற்று முதல் நீர்த்தேக்கங்களை அண்மித்த சில பகுதிகளில் ஆய்வுப் பணியை ஆரம்பித்துள்ளனர் என்று மின்சக்தி மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இன்றும் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 59 வீதம் வரை குறைவடைந்துள்ளதால் நீர்மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுவதாக மின்சக்தி மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

## தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் 3 குட்டிகளை ஈன்ற சிங்கம்!

கொழும்பு, பெப். 21

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மூன்று சிங்கக் குட்டிகள் பிறந்துள்ளன.



தாய் மற்றும் குட்டிகள் நலமாக உள்ளன என மிருகக் காட்சி சாலையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த குட்டிகளின் தாய் குட்டிகளை பிரசவிக்கும் வரையில் தந்தை சிங்கம் அருகிலேயே இருந்து பாதுகாத்ததை அவதானிக்க முடிந்துள்ளது.

மூன்று சிங்கக் குட்டிகளில் ஓர் ஆண் மற்றும் இரண்டு பெண் குட்டிகள் உள்ளடங்கு கின்றன.

கடந்த மாதம் 22 ஆம் திகதி Thor மற்றும் Naledy என்ற சிங்கங்களுக்கு இந்தக் குட்டிகள் பிறந்துள்ளன.

2013 ஆம் ஆண்டு Naledy என்ற சிங்கம் ஜேர்மனியில் உள்ள Tierpark Hagenbeck பூங்காவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. Thor என்ற சிங்கம் கொரியாவில் உள்ள Seoul பூங்காவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

குட்டிகள் பிறக்கும் போது தந்தைச் சிங்கம் ஒன்று அருகில் இருந்த முதல் சந்தர்ப்பம் இதுவென தெஹிவளை மிருகக் காட்சிச் சாலை அதிகாரி தினுஷிகா தெரிவித்துள்ளார்.

பொதுவாக சிங்கக் குட்டிகள் பிறக்கும் போது, ஆண் சிங்கம், குட்டிகள் மீது ஆக்ரோஷமான குணத்தையே வெளிப்படுத்தும். இதன் காரணமாகவே குட்டிகளிடம் இருந்து ஆண் சிங்கத்தை பிரித்து தனியாக வைப்பது வழமை.

எனினும், இந்தச் சிங்கம் அவ்வாறு செயற்படவில்லை எனவும் குட்டிகளை தாய்ச் சிங்கம் பெறும்வரை தந்தைச் சிங்கம் பாதுகாப்பு கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இந்த முறை குட்டிகளை தந்தையிடம் இருந்து பிரிக்கவில்லை என இந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

# ஒத்த கருத்துச் சொற்கள்

| | |
|---|---|
| அழுக்கு | - அசுத்தம் |
| அடக்கம் | - பணிவு |
| அழகு | - வடிவு |
| அழகு | - எழில் |
| அழகு | - வனப்பு |
| அழகு | - சுந்தரம் |
| அழகு | - கவின் |
| அங்கத்தவர் | - உறுப்பினர் |
| அலை | - திரை |
| அருமை | - அரிது |
| அன்பு | - பரிவு |
| அன்பு | - அருள் |
| அன்பு | - பற்று |
| அன்பு | - நேசம் |
| அன்பு | - பிரியம் |
| இன்பம் | - களிப்பு |
| இன்பம் | - ஆனந்தம் |
| இன்பம் | - குதூகலம் |
| இளைஞன் | - வாலிபன் |
| இரை | - இரைச்சல் |
| இரை | - உணவு |
| இரை | - தீன் |
| இங்கிதம் | - இனிமை |
| இளை | - மெலிதல் |
| இறை | - தெய்வம் |
| இறை | - வரி |
| இறை | - அரசன் |
| இலை | - தழை |
| இடபம் | - எருது |
| இடபம் | - நந்தி |
| இடபம் | - காளை |
| இடுக்கண் | - துன்பம் |
| இன்னல் | - துன்பம் |
| இணக்கம் | - உடன்பாடு |
| இபம் | - யானை |
| இவனி | - திரை |
| இறப்பு | - மரணம் |
| இறப்பு | - சாவு |
| இறப்பு | - மரி |
| இறப்பு | - மறைதல் |
| இனிது | - நன்கு |
| இசை | - சங்கீதம் |
| இசை | - புகழ் |
| இடையிடுதல் | - தடை |
| இடிபாடு | - அழிவு |
| இணைதல் | - ஒன்றுசேர்தல் |
| இரத்தம் | - செந்நீர் |
| இரத்தம் | - உதிரம் |
| இரண்டகம் | - துரோகம் |
| இரகசியம் | - அந்தரங்கம் |
| இரகசியம் | - உளவு |
| இரவு | - கங்குல் |
| இரவு | - அல் |
| இரவு | - இராத்திரி |
| இரவு | - நிசி |
| இலச்சினை | - சின்னம் |
| இலச்சினை | - அடையாளம் |
| இனம் | - சாதி |
| இனம் | - உறவு |
| இனம் | - பந்தம் |
| இனம் | - கிளை |
| இனம் | - சுற்றம் |
| இனம் | - குலம் |
| இரவல் | - கடன் |
| இழவு | - மரணம் |
| இழவு | - கேடு |
| ஈனம் | - குறைபாடு |
| ஈயார் | - உலோபி |
| ஈகை | - கொடை |
| ஈரடி | - இணையடி |

# ‘உ’ வரிப் பழமொழிகள்

★ உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.
★ உடம்பு போனால் போகிறது கை வந்தால் போதும்.
★ உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா
★ உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை.
★ உடைத்த சங்கு ஊதுப் பறியுமா?
★ உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
★ உட்கார்ந்தால் அல்லவா படுக்க வேண்டும்.
★ உண்டு கொழுத்தால் நண்டு வளையில் இராது.
★ உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
★ உண்ணீர் உண்ணீரென்றே ஊட்டாதார் தம் மனையில் உண்ணாமை கோடி பெறும்.
★ உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும்.
★ உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
★ உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?
★ உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
★ உழக்கு மிளகு கொடுப்பானேன், ஒளிந்திருந்து மிளகு சாறு குடிப்பானேன்
★ உலை வாயை மூடினாலும் ஊர்வாயை மூடேலாது.
★ உலோபிக்கு இரட்டை செலவு.
★ உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை.
★ உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது.
★ உளவு இல்லாமல் களவு இல்லை.
★ உள்ளது சொல்ல ஊருமல்ல நல்லது சொல்ல நாடுமல்ல
★ உள்ளது போகாது இல்லது வாராது.
★ உள்ளம் தீயெரிய உதடு பழுஞ் சொரிய
★ உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலை வானேன்
★ உறவு போகாமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது. இதனை இப்படி கூட கூறுவார்கள்-பார்க்காத உறவும் கேட்காத கடனும் பாழ்





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5 வினாத்தாள் 15

பகுதி - I நேரம்- 45 நிமிடம்

01 ஒரு செவ்வகத்தின் பரப்பளவு 36cm கொண்டது. அதேயளவு பரப்பளவைக் கொண்ட சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் யாது?
1) 9 cm 2) 6 cm 3) 4 cm

02 மிகச் சரியான வாக்கியத்தின் கீழ்க்கோடிடுக.
1. மாணவர்கள் நன்றாகப் படித்தால் எல்லோரும் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறமுடியும்.
2. மாணவர்கள் பாடசாலைக்கு வராமல் நின்று வீட்டில் படித்தால் பரீட்சையில் சித்தியெய்த முடியும்.
3. மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சென்று படித்தால் எழுபது புள்ளிகளுக்கு மேல் பெற முடியும்.

03

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 3 | 3 | 27 | 7 | 5 | ...... | 11 |
| 2 | 8 | | 4 | 64 | | 6 | 216 | |

1) 200 2) 115 3) 125




04 சிறப்பு அங்காடி ஒன்றின் விற்பனைக் கண்காட்சி ஒரு புதன்கிழமை ஆரம்பித்தது. அது எட்டு நாள்களாக நடைபெற்றது எனின் முடிவடைந்த நாள் எது?
1) வியாழன் 2) புதன் 3) செவ்வாய்

★ 05 ஆம், 06 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவுசெய்க.




05. கோழி மிதித்துக் குஞ்சு சாகாது.
1) சிறுகுற்றமுந் தவிர் 2) வீண் தூற்றுதல் 3) அன்புக் கண்டனம் அழிக்காது


06. சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
1) பயிற்சியின் பயன்
2) உழைத்துழைத்து உண்
3) கூடிய முயற்சியின் குறைந்த பயன்

07 சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.
மென்மை - சுவை

1)  2)  3) 

08. நிழல் - தூய காற்று

1)  2)  3) 

07 


இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?
1) 10
2) 11
3) 12

08 தொண்ணூற்றொன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பது" என்ற எண்ணுடன் ஒன்றைக்கூட்டும் போது கிடைக்கும் எண்
1) 100 000 2) 99 910 3) 99 900

09 100m நீளமான வேலி ஒன்றில் சம இடைவெளியில் 11 கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அதே இடைவெளியில் 200m நீளமான வேலிக்குத் தேவையான கம்பங்கள் எத்தனை?
1) 22 2) 20 3) 21

10 

இவ்வெழுத்தின் மீது மையைப் பூசி அவ் எழுத்தின் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக் கோடு வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும் போது கிடைப்பது.

1.  2.  3. 

11 தமிழ்ப் பாடத்திற்கான ஆறு மாதாந்தச் சோதனைகளில் ஆண்டு 5 மாணவன் ஒருவன் பெற்றுக்கொண்ட புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன. அடுத்த இரு மாதாந்தச் சோதனைகளில் அவன் பெறக் கூடிய புள்ளிகளை முறையே காட்டும் விடை.

36, 44, 40, 48, 44, 52, .............. , ..................

1. 56, 48 2. 56, 60 3. 48, 56


12 சரியான தொடர்பைத் தெரிவு செய்க.

1. □ = □+□+□ 2. □ = □+□ 3. □ = □

13 இன்று இலங்கையிலே பல பிரதேசங்களில் ஆறுகளும் குளங்களும் வற்றிக் கொண்டு போகின்றன. இதற்குக் காரணம்
1. மக்கள் விவசாயத்திற்கு அதிகளவு நீரைப் பயன்படுத்துகின்றனர்.
2. மக்கள் அதிக எண்ணிக்கையான மரங்களை நடுகின்றனர்.
3. மக்கள் தொடர்ந்து மரங்களை வெட்டி வீழ்த்தி வருகின்றமை.





14 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை
1. 5 2. 7 3. 3

15


| P | Q | R | S | T | U | V | W |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |

❖ இவ்வட்டவணையை அவதானித்து விடை தருக.

P + Q + R = .................................................
1. 5 2. 6 3. 7


U ÷ 2 + 2 = .................................................
1. 4 2. 3 3. 5

16 5 நண்பர்கள் தமக்கிடையே வாழ்த்தட்டைகள் பரிமாறினர். பரிமாறப்பட்ட வாழ்த்தட்டைகள் எத்தனை?
1. 25 2. 20 3. 10


17 

இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன?
1. 14 2. 9 3. 13


18 முக்கோண வடிவ காணியின் ஒரு பக்கத்தில் நின்று பார்க்கும்போது 5 தூண்கள் தெரிந்தன. போடப்பட்ட மொத்தத் தூண்கள் எத்தனை?
1. 15 2. 13 3. 12

19 

இவ்வுருவிற்கு வரையக் கூடிய சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?
1. பல 2. 2 3. 3

20 

ரூபா 50.00



ரூபா 90.00

மாம்பழம் ஒன்றினதும் அன்னாசி ஒன்றினதும் விலை யாது?
1. ரூபா 30.00 2. ரூபா 40.00 3. ரூபா 50.00

மாம்பழம் 5 இனதும் அன்னாசி 3 இனதும் விலை யாது?
1. ரூபா 150.00 2. ரூபா 140.00 3. ரூபா 110.00

காலைக்கதிர் Kalaikkathir



# திடீரென சரிந்தது குப்பைமேடு; மொஸாம்பிக்கில் 17 பேர் பலி!



ஜோகன்னஸ்பர்க், பெப்.21

மொஸாம்பிக் நாட்டில் குப்பை மேடு சரிந்தது. இந்தக் குப்பைக் குவியல்களுக்குள் சிக்கி 17 பேர் உடல் நசுங்கிப் பலியாகினர்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மொசாம்பிக் நாட்டின் சில இடங்களில் கனமழை பெய்து வருகிறது. அங்குள்ள மபுடோ நகரின் புறநகர்ப் பகுதிகளில் நகரம் முழுவதும் சேரும் குப்பைகள் ஒன்றாக கொட்டிக் குவிக்கப்படுகின்றன. பல ஆண்டுகளாக அங்கு கொட்டப்படும் குப்பைகள் சுமார் மூன்று மாடிக் கட்டடத்தின் உயரம் அளவுக்கு குவிந்துள்ளன.

இந்த சூழலில், அங்கு கனமழை பெய்து வரும் நிலையில், அந்தக் குப்பை மேடு திடீரென சரிந்து விழுந்தது. இதில், அப்பகுதியில் வசித்து வந்த மக்கள் சிக்கிக்கொண்டனர்.

தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். தற்போதுவரை 17 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் சிக்கியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது

இந்த விபத்துக் குறித்து தேசிய பேரிடர் மீட்பு அதிகாரி கூறுகையில், குப்பை மேடு சரிந்து அருகில் இருந்த வீடுகள் மீது விழுந்தது. மேலும் சில குடும்பங்கள் இதில் சிக்கியிருக்கக் கூடும் என அஞ்சுகிறோம்.- என்றார்.

## 66 பேர் பலியான விமான விபத்து ஈரானில் மீட்புப் பணி ஆரம்பம்

ஈரானில் 66 பேரைப் பலி கொண்ட விமான விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணி தீவிரமாக நடைபெறுகின்றது.

ஈரான் நாட்டின் பயணிகள் விமானம் ஒன்று கடந்த ஞாயிறன்று தலைநகர் தெஹ்ரானில் இருந்து அங்குள்ள யசுஜ் நகரை நோக்கிச் சென்றபோது, தேனா என்ற மலையின் மீது மோதி நொறுங்கியது.

இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 60 பயணிகள், விமானச் சிப்பந்திகள் 6 பேர் என 66 பேரும் பலியாகிவிட்டனர்.

விபத்து நடந்த மலைப்பகுதியில் கடுமையான பனிப்பொழிவு மற்றும் பலத்த மழை பெய்து வருகின்றமையால் மீட்புக் குழுவினர் உடனடியாக அங்கு சென்று மீட்புப் பணிகளில் ஈடுபடுவது கடினம் என்று கூறப்பட்டது.

இந்நிலையில் தேடுதல் மற்றும் மீட்புக் குழுவினர் விபத்து நடந்த இடத்தை நேற்று சென்றடைந்து





மீட்புப் பணிகளை உடனடியாகத் தொடங்கினர். கடும் பனிமூட்டம் காரணமாகவே விமானம் விபத்தில் சிக்கியது என்பது தற்போது தெரிய வந்துள்ளது.

விமான விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டனியோ குட்ரஸ் தனது இரங்கலைத் தெரிவித்து உள்ளார். அதில் இறந்தவர்களுக்கு எனது இதயபூர்வ அனுதாபங்கள் என்றும் அவர் கூறி இருக்கிறார்.

## சுமாத்திராவில் எரிமலை சீற்றம்; விமானங்கள் பறக்கத் தடை



ஜகார்த்தா, பெப்.21

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள ஓர் எரிமலை அதிக வெப்பத்துடன் சாம்பலை வெளிப்படுத்தி வருவதால் அப்பகுதியில் விமானங்களை இயக்க வேண்டாம் என அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடலுக்கு நடுவே அமைந்துள்ள இந்தோனேசிய நிலப்பகுதி நெருப்பு வளையம் என அழைக்கப்படுகிறது. இங்கு ஏராளமான எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளன. சில சமயங்களில் அவை ஆக்ரோஷமாக வெடித்துச் சிதறி நெருப்புக் குழம்பை வெளிப்படுத்தும். இதில் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

அவ்வகையில் தற்போது சுமாத்ரா தீவில் உள்ள சினபங் மலை என்ற எரிமலை தற்போது கடும் சீற்றத்துடன் காணப்படுகிறது. நேற்று முதல் அதிக வெப்பத்துடன் கூடிய சாம்பலை அது வெளிப்படுத்தி வருகிறது.

விண்ணை முட்டும் அளவுக்கு எழுந்துள்ள இந்தப் புகை மற்றும் சாம்பல், எரிமலையின் சுற்றுப்புற பகுதிகளில் 16 ஆயிரம் அடி தூரம் வரை பரவியுள்ளது. எரிமலையைச் சுற்றி வசிக்கும் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

எரிமலை எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறும் என்பதால் விமான நிறுவனங்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் விமான நிறுவனங்கள் விமானங்களை இயக்கக் கூடாது என ஆஸ்திரேலியாவின் டார்வின் நகரில் உள்ள பிராந்திய எரிமலை ஆய்வு மையம் சிவப்பு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் போது 2 பேர் உயிரிழந்தனர். 2014இல் 16 பேரும், 2016இல் 76 பேரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## அவசரகால நிலைமை மாலைதீவில் நீடிப்பு

மாலைதீவில் மேலும் 30 நாள்களுக்கு அவசர காலநிலை நீடிக்கப்பட உள்ளதாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

மாலைதீவில் எதிர்க்கட்சி எம்.பி.க்களைத் தகுதி நீக்கம் செய்தது செல்லாது, சிறையில் உள்ள அரசியல் தலைவர்களை விடுவிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனால், தனது ஆட்சிக்கு ஆபத்து வரும் என்பதால், நீதிமன்ற உத்தரவை ஏற்க அதிபர் அப்துல்லா யாமீன் மறுத்து விட்டார்.

இதனால், அவரைப் பதவி நீக்கும் நடவடிக்கையில் தலைமை நீதிபதி இறங்கினார். இதனை அடுத்து, கடந்த 5ஆம்திகதி மாலைதீவில் 15நாள்கள் அவசரநிலை பிரகடனம் செய்து அதிபர் உத்தரவிட்டார். ஊழல் குற்றச்சாட்டில் தலைமை நீதிபதி உள்ளிட்ட இரு நீதிபதிகள் கைது செய்யப்பட்டனர். நேற்று இரவுடன் அவசரநிலைக்கான காலக்கெடு முடிவடைய உள்ள நிலையில், அதனை நீடிக்க நாடாளுமன்றத்திடம் அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிபர் அப்துல்லா யாமீன் கோரிக்கைக்கு அந்நாட்டு நாடாளுமன்றக் குழு ஒப்புதல் அளித்ததையடுத்து அவசர நிலை மேலும் 30 நாள்கள் நீடிக்கப்பட உள்ளதாக மாலைதீவு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

அதிபர் யாமீனின் கோரிக்கைக்கு 38 எம்.பிக்கள் ஆதரவு அளித்தனர் எனவும் அனைத்து எதிர்க்கட்சி எம்.பிக்களும் புறக்கணித்தனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், மாலைதீவு அதிபரின் அவசரநிலை நீடிப்பு நடவடிக்கை சட்ட விரோதமானது எனவும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மாலைதீவு நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற 48 எம்.பிக்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. வாக்கெடுப்பு நடைபெறும்போது, 48 எம்.பிக்கள் அவையில் கலந்து கொள்வார்கள் என்று ஆளும் கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

(உ)



காலைக்கதிர் Kalaikkathir



# ‘ஜெ’ பிறந்த தின நிகழ்வில் பங்கேற்க சென்னை வருகிறார் பிரதமர் மோடி

ஜெயலலிதா பிறந்த நாளையொட்டி பிரதமர் நரேந்திரமோடி சனியன்று சென்னை வருகிறார்.

மானிய விலை ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தை அவர் தொடங்கிவைக்கவுள்ளார்

ஜெயலலிதாவின் பிறந்த நாளான வரும் 24ஆம் திகதி (சனிக்கிழமை) பெண்களுக்கான மானிய விலை ஸ்கூட்டர் திட்டம் மற்றும் மரக்கன்று நடும் விழா ஆகியன தமிழக அரசு சார்பில் நடத்தப்பட இருக்கிறது. சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் இந்த விழாவில் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்க இருக்கிறார்.



இதற்காக, டில்லியில் இருந்து தனி விமானத்தில் அவர் வருகிறார்.

விமான நிலையத்தில் இருந்து நேராக கலைவாணர் அரங்கத்திற்கு பிரதமர் நரேந்திரமோடி காரில் வரவுள்ளார்.

அதன்பிறகு, மாலை 6.50 மணிக்கு அங்கிருந்து புறப்படும் பிரதமர் நரேந்திரமோடி நேராக ஆளுநர் மாளிகை செல்கிறார். அன்று இரவு அங்கேயே அவர் தங்குகிறார். மறுநாள் (25ஆம் திகதி) காலை புதுச்சேரிக்கு ஹெலி கொப்டரில் புறப்பட்டு செல்கிறார். முற்பகல் 10.45 மணியளவில் அங்குள்ள அரவிந்தர் ஆசிரமத்திற்கு சென்று பார்வையிடுவார். பின்னர், அங்கிருந்து ஆரோவில் புறப்பட்டு செல்வார். நண்பகல் 12 மணியளவில் அங்கு நடைபெறும் ஆரோவில் உதய தின விழாவில் அவர் கலந்து கொள்கிறார்.

தொடர்ந்து, லாஸ்பேட்டைக்கு வரும் பிரதமர் நரேந்திரமோடி, பிற்பகல் 3 மணியளவில் அங்கு நடைபெறும் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பேசுவார். கூட்டம் முடிந்ததும், புதுச்சேரியில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் சென்னை விமான நிலையம் திரும்பி, அங்கிருந்து அன்று மாலையே டில்லிக்கு தனி விமானத்தில் புறப்பட்டுச் செல்லவுள்ளார். (உ)

# தமிழக அரசின் ஆணையை எதிர்த்து நளினி வழக்கு



ஆயுள் தண்டனை கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணையை எதிர்த்து நளினி தொடர்ந்துள்ள வழக்கிற்கு, மத்திய அரசு பதில் அளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் பெண்கள் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் தமது விடுதலை தொடர்பில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

நான் ஆயுள் தண்டனை கைதியாக 26 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழக சிறைகளில் ஆயுள் தண்டனை கைதிகளாக அடைக்கப்பட்டுள்ளவர்களை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து கடந்த முதலாம் திகதி அரசாணை வெளியிட்டுள்ளது.

ஆயுள் தண்டனை கைதிகளை அரசமைப்புச் சட்டம் பிரிவு 161-ன் படி முன்கூட்டியே விடுதலை செய்ய மாநில அரசுக்கு போதிய அதிகாரம் உள்ளது.

ஆனால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 435 (1) (அ)படி, சி.பி.ஐ. விசாரித்த வழக்கு என்பதால் ஆயுள் தண்டனை பெற்ற என்னை போன்ற கைதிகளை மத்திய அரசின் ஒப்புதல் பெறாமல் முன்கூட்டியே விடுதலை செய்ய முடியாது என தமிழக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது மாநில அரசின் இறையாண்மைக்கும், அதிகாரத்திற்கும் எதிராக உள்ளது.

ஆயுள் தண்டனை கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் போது அவர்களின் நன்னடத்தை மற்றும் ஏற்கனவே அனுபவித்த தண்டனைக் காலத்தை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும். மறுவாழ்வு அளிப்பதற்காகத்தான் கைதிகளை அரசு விடுதலை செய்கிறது. எனவே, கைதிகள் மத்தியில் இதுபோன்ற பாகுபாடுகளை பார்க்கக்கூடாது.

எனவே குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 435 (1) (அ) சட்டவிரோதமானது என அறிவிக்க வேண்டும். இது தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணையையும் ரத்து செய்ய வேண்டும். - இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, நீதிபதி அப்துல் குத்தூஸ் ஆகியோர் நேற்று முன்தினம் விசாரித்தனர். பின்னர், மனுவுக்கு 4 வாரத்துக்குள் பதில் அளிக்கும்படி, மத்திய அரசின் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டு, விசாரணையை மார்ச் 19ஆம் திகதிக்கு தள்ளி வைத்தனர்.

# அழிவின் விளிம்பில் 42 இந்திய மொழிகள்




தமிழகத்தின் இரு வட்டார மொழிகள் உட்பட இந்தியாவின் தொன்மையான 42 மொழிகள் அழிவின் விளிம்பில் உள்ளன என ஓர் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் 22 முக்கிய மொழிகள் மட்டுமின்றி, 100இற்கும் அதிகமான வட்டார மொழிகளும் பரவலாக பேசப்பட்டு வருகின்றன. இந்த 100 மொழிகளில் 42 வட்டார மொழிகளை 10 ஆயிரத்துக்கும் குறைவான மக்கள் மட்டும்தான் பேசுகின்றனர். இந்த 42 மொழிகளும் அழிவின் விளிம்பில் உள்ளன என இந்திய உள்துறை அமைச்சகம் மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அந்தமான் நிக்கோபர் தீவுகளில் 11 மொழிகள், மணிப்பூர் பழங்குடிகளின் 7 மொழிகள், இமாச்சலப்பிரதேசத்தில் 4 மொழிகள், ஒடிசாவில் 3 மொழிகள், கர்நாடகாவில் 2 மொழிகள், தமிழகத்தில் 2 மொழிகள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்த வட்டார மொழிகளுக்கு எழுத்து வடிவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரையில் கமல் இன்று முதல் அரசியல் மாநாடு

மதுரையில் இன்று நடைபெறும் கமலஹாசனின் முதல் அரசியல் மாநாட்டில் அரவிந்த் கெஜ்ரிவால் பங்கேற்கிறார்.

ஒத்தக் கடை மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுஎனத்தகவல்வெளியாகியுள்ளது.

புதிய அரசியல் கட்சியை இன்று தொடங்க உள்ள நடிகர் கமலஹாசன் இதற்காக நேற்று மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றார்.




இன்று காலை ராமேஸ்வரத்தில் தனது பயணத்தைத் தொடங்கும் கமலஹாசன் ராமநாதபுரம், பரமக்குடி, மானாமதுரை மற்றும் மதுரையில் 4 பொதுக்கூட்டங்களில் பேச உள்ளார். இதில் மதுரையில் இன்று மாலை நடைபெற உள்ள பொதுக் கூட்டம் தமிழகம் முழுவதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கமலஹாசனுக்கு ஏற்கனவே தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நற்பணி மன்ற ரசிகர்கள் உள்ளனர். சமீப காலமாக புதிய உறுப்பினர்களும் அவரது கட்சியில் சேர்க்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir



# கூட்டு முயற்சியால் வெற்றி!



ரி20 ஆட்ட வெற்றி குறித்து கோஹ்லி பெருமிதம்

"தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் வீரர்களின் கூட்டு முயற்சியால் வெற்றி பெற்றோம்" என்று இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்தார்.

விராட்கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை 1: 2 என்ற கணக்கில் இழந்த இந்திய அணி, ஒருநாள் போட்டி தொடரை 5:1 என்ற கணக்கில் கைப்பற்றி சரித்திரம் படைத்தது.

இந்த நிலையில் இந்தியா – தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் போட்டித் தொடரில் ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள வான்டரர்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது.

முதலில் துடுப்பொடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 203 ஓட்டங்கள் குவித்தது. அதிக பட்சமாக தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் 72ஓட்டங்கள் சேர்த்தார். பின்னர் ஆடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்கள் எடுத்து தோல்வியைத் தழுவியது. அதிக பட்சமாக தொடக்க ஆட்டக்காரர் ஹென்ரிக்ஸ் 70 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார் 24 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகள் வீழ்த்தி ஆட்டநாயகன் விருது பெற்றார். உனட்கட், ஹர்திக் பாண்டயா, யுஸ்வேந்திர சாஹல் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினார்கள்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகள் இடையிலான 2ஆவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் இன்று (புதன்கிழமை) நடக்கிறது.

வெற்றிக்கு பிறகு இந்திய அணி தலைவர் விராட்கோஹ்லி அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:–

ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு நன்றாக ஒத்துழைத்தது. தொடக்க ஆட்டக்காரர்கள் ரோகித் சர்மா, ஷகிர் தவான் ஆகியோரின் ஆட்டம் அருமையாக இருந்தது. ஒட்டு மொத்த அணியின் துடுப்பாட்டமும் நன்றாக இருந்தது. பந்து வீச்சில் புவனேஷ் வர்குமார் சிறப்பாக செயற்பட்டார். அவரது அனுபவம் அணிக்கு உதவி கரமாக இருந்தது. அணியினரின் சிறப்பான கூட்டு முயற்சியால் வெற்றி பெற்றோம். 20 ஓவர் போட்டியில் இது போன்று செயற்பட வேண்டும் என்று நாங்கள் நீண்ட நாள்கள் எதிர்பார்த்தோம். துடுப்பாட்டக்காரர்களும், பந்து வீச்சாளர்களும் ஒருங்கிணைந்த சமபலத்தை வெளிக்காட்டிய ஆட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

தென்னாபிரிக்க அணியின் கடைசி கட்ட பந்து வீச்சு பாராட்டுக்குரிய வகையில் இருந்தது. 16 ஓவரின் போது நாங்கள் 220 ஓட்டங்களை எடுக்க முடியும் என்று நினைத்தோம். ஆனால் டோனியின் விக்கெட்டை வீழ்த்தியமையுடன், ஓட்ட வேகத்தையும் கடைசி நேரத்தில் தென்னாபிரிக்க அணியினர் கட்டுப்படுத்தினார்கள். நான் துடுப்பாட்டத்தின்போது ஓர் ஓட்டம் எடுக்க ஓடுகையில் காயம் ஏற்பட்டது. அதிஷ்டவசமாக காயம் பெரிதாக இல்லை. காயத்தின் தன்மை அதிகரித்து விடக்கூடாது என்பதற்காகவே சிறிது நேரம் ஓய்வு எடுத்தேன். – இவ்வாறு அவர் கூறினார்.

தோல்வி குறித்து தென்னாபிரிக்க அணியின் தலைவர் டுமினி கருத்து தெரிவிக்கையில், "இந்த தோல்வி ஏமாற்றம் அளிக்கிறது. உண்மையை சொல்லப்போனால் இந்திய அணி சிறப்பாக விளையாடியது என்று நான் நினைக்கவில்லை. எங்கள் திறமையை நாங்கள் சரியாக வெளிப்படுத்தாமையே தோல்விக்கு காரணமாகும். எங்களது திட்டத்தை களத்தில் நன்றாக செயற்படுத்தி இருந்தால் முடிவு வேறுமாதிரி இருந்து இருக்கும். எதிர்பாராதவிதமாக நாங்கள் விரும்பிய படி திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை. எங்களது திட்டங்கள் சிறப்பானவை. குறுகிய வடிவிலான ஆட்டங்களில் வியூகத்தைச் சரியாகச் செயற்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். நாங்கள் கேட்ச் வாய்ப்புகளையும் நழுவ விட்டோம். நான் உட்பட அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படவில்லை. நல்ல இணை ஆட்டமும் அமையவில்லை. துடுப்பாட்ட வீரர்களும் தங்கள் ஆட்டத்தை ஆராய்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும். நிச்சயமாக நாங்கள் சரிவில் இருந்து மீண்டு வலு வாக வருவோம் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்" – என்றார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார் அளித்த பேட்டியில், '20 ஓவர் போட்டியில் 5 விக்கெட்டுகள் வீழ்த்தியமை அற்புதமானது. சரியான பகுதியில் பந்து வீச வேண்டும் என்று நினைத்து செயற்பட்டேன். அதற்கு நல்ல பலன் கிடைத்தது. தென்னாபிரிக்க வீரர்கள் எந்த மாதிரியாக பந்து வீசுகிறார்கள். ஆடுகளம் எப்படிச் செயற்படுகிறது என்பதை பார்த்து அதற்கு தகுந்தபடி திட்டமிட்டு பந்து வீசினோம். கடினமான சூழ்நிலையில் பந்து வீசுவதை அனுபவிக்கிறேன். தற்போது விக்கெட்டுகளை வீழ்த்த பந்து வீச்சு முறையில் புதிய வழிமுறைகளை கையாள வேண்டியது அவசியமானதாகும்" – என்று கூறினார்.



# டென்னிஸில் உலகின் முதலிடத்தில் 36 வயதில் மீள ரோஜர் பெடரர்!

உலகடென்னிஸ்வீரர் – வீராங்கனைகளின்தரவரிசைப்பட்டியலை சர்வதேசடென்னிஸ்சம்மேளனம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

இதன்படி ஆண்களுக் கான ஒற்றையர்தரவரிசையில்ரோட்டர்டாம் டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற சுவிற்ஸர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் (10,105 புள்ளிகள்) முதலாம் இடத்தை பெற்று இருக்கின்றமை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

36 வயதான ரோஜர் பெடரர் இந்த ஆண்டில் ஆஸ்திரேலிய ஓபன்பட்டத்தைவென்று இருந்தார். இந்த சீசனில் 12:0 என்ற கணக்கில் வெற்றியைக் குவித்து இருக்கும் பெடரர் அதிக வயதில் முதலாம் இடத்தை பிடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார். இதற்கு முன்பு அமெரிக்க வீரர் ஆந்த்ரே அகாசி கடந்த 2003ஆம் ஆண்டில் தனது 33 வயதில் முதலாம் இடத்தை பிடித்ததே இந்த வகையில் சாதனையாக இருந்தது.

2004ஆம் ஆண்டில் பெடரர் முதல் முறையாக முதலாம் இட அரியணையை அலங்கரித்தார். அது முதல் 2008ஆம் ஆண்டு வரை அவர் 237 வாரங்கள் தொடர்ச்சியாக முதலிடத்தை ஆக்கிரமித்தார். பெடரர் மொத்தத்தில் 302 வாரங்கள் முதலிடத்தில் இருந்த வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆவார். 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு பிறகு பெடரர் தற்போதுதான் முதலிடத்தை பிடித்துள்ளார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் நோவக் ஜோகோவிச் (செர்பியா), ரபெல் நடால் (ஸ்பெயின்), ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) ஆகியோர் முதலாம் இடத்தில் இருந்துள்ளனர்.


முதலிடத்தில் இருந்த ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் (9,760 புள்ளிகள்) 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். கனடா வீரர் மரின் சிலிச் (4,960 புள்ளிகள்) 3ஆவது இடத்தில் நீடிக்கிறார். பல்கேரியா வீரர் டிமிட்ரோவ் ஓர் இடம் முன்னேற்றம் கண்டு 4 ஆவது இடத்தையும், ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்ரேவ் ஓர் இடம் சறுக்கி 5ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். டோமினிச் திம் (ஆஸ்திரியா) 6ஆவது இடத்திலும், டேவிட் கோபின் (பெல்ஜியம்) 7ஆவது இடத்திலும், ஜாக் சோக் (அமெரிக்கா) 8ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர். தென்னாபிரிக்கா வீரர் கெவின் அண்டர்சன் இரண்டு இடங்கள் முன்னேறி 9ஆவது இடத்தையும், அர்ஜென்டினா வீரர் ஜூயன் மார்ட்டின் டெல்போர்டோ ஓர் இடம் சரிந்து 10ஆவது இடத்தையும் பிடித்தனர். சென்னை ஓபன் சேலஞ் சர்ஸ் போட்டியில் இறுதி ஆட்டத்தில் தோல்வி கண்ட இந்திய வீரர் யுகி பாம்ப்ரி 11 இடம் ஏற்றம் கண்டு 101ஆவது இடம் பிடித்துள்ளார்.

பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (8,010 புள்ளிகள்) முதலிடத்திலும், ருமேனியா வீராங்கனை சிமோனா ஹாலெப் (7,965 புள்ளிகள்) 2ஆவது இடத்திலும் தொடருகின்றனர். ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஜா ஓர் இடம் முன்னேற்றம் கண்டு 3ஆவது இடத்திலுள்ளார்.

## பிரேஸிலில்

# வீரர்களின் மோதல்களால் கலவரமான உதைபந்தாட்டம்

## சிவப்பு அட்டை காட்டி 9 வீரர்கள் வெளியேற்றம்



பிரேஸில் நாட்டில் நடைபெற்ற உதைபந்து போட்டியின்போது வீரர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டதால் ஆட்டம் இடையிலேயே கைவிடப்பட்டது.

பிரேஸிலில் நடைபெற்ற மாநில சம்பியன்ஷிப் உதைபந்து தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு போட்டியில் விடோரியா – பகியா அணிகள் மோதின. விடோரியா விற்கு சொந்தமான மைதானத் தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 33ஆவது நிமிடத்தில் விடோரியா முதல் கோலை பதிவு செய்தது.

பின்னர் 2ஆவது பாதி நேரம் ஆட்டம் தொடங்கியதும் நான்காவது நிமிடத்தில் பகியா அணிக்கு பெனால்டி வாய்ப்புக் கிடைத்தது. இதை பயன்படுத்தி அந்த அணியின் வினிசியஸ் கோல் அடித்தார். அத்துடன் விடோரியா ரசிகர்கள் முன் சென்று ஆத்திரமூட்டும் வகையில் வினிசியஸ் டான்ஸ் ஆடினார்.

இதனால் கோபம் அடைந்த விடோரியா அணி கோல் காப்பாளர் வினிசியஸை தாக்கினார். அவருடன் சில வீரர்களும் தாக்குதல் நடத்தினார்கள். இதற்கு பகியா அணி வீரர்களும் பதில் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் போட்டி வன்முறையாக மாறியது. இந்த வன்முறை காரணமாக பகியா அணியின் 3 வீரர்களும், விடோரியா அணியின் 3 வீரர்களும் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டனர்.

மீளவும் ஆட்டம் தொடங்கிய சிலநிமிடங்களில் இருஅணிகளில் இருந்து மேலும் தலா ஒரு வீரர் சிவப்பு அட்டை மூலம் வெளியேற்றப்பட்டனர். ஆட்டம் முடிவடைவதற்கு 13 நிமிடங்களுக்கு முன் விடோரியாவின் பிஸ்போ என்ற வீரர் இரண்டு மஞ்சள் அட்டை மூலம் வெளியேற்றப்பட்டார்.

இதனால் மொத்தம் 9 வீரர்கள் சிவப்பு, மஞ்சள் அட்டைகள் மூலம் வெளியேற்றப்பட்டனர். விடோரியா அணியில் 5 வீரர்கள் வெளியேற்றப்பட்டமையால், 6 வீரர்களே இருந்தனர். 6 வீரர்கள் மூலம் போட்டியை நடத்த இயலாது என்பதால் போட்டி அத்துடன் கைவிடப்பட்டது.

இதுகுறித்து பிரேஸில் விளையாட்டு நீதிமன்றம் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது.

(உ)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் இடம்பெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது இந்த இரு அமைச்சுக்களும் ஜனாதிபதியின் கைகளுக்கு வரும். அல்லது அவருக்கு நெருக்கமான சு.க. அமைச்சர்கள் இருவரிடம் கையளிக்கப்பட வாய்ப்புள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறின.

தற்போது ஐ.தே.கவின் வசமுள்ள அந்த இரு அமைச்சுக்களையும் விட்டுக்கொடுப்பதற்குப் பிரதமர் ரணில் இணங்கியுள்ளார் என்றும், நல்லாட்சி அரசு தொடர்வதற்காக இந்த விட்டுக் கொடுப்பைச் செய்வதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

நாட்டுக்குத் தேவையான துரித பொருளாதார முகாமைத்துவ மாற்றங்களுடனான புதிய நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான தேசிய பொருளாதாரச் சபையினூடாக அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நிதி அமைச்சு மற்றும் பிரதமர் வசமுள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் பணிகள் ஜனாதிபதி தலைமையிலான தேசிய பொருளாதாரச் சபையின் ஊடாகவே முன்னெடுக்கப்படவுள்ளன.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருக்கும் நிதி மற்றும் பொருளாதார அமைச்சுகளின் முன்மொழிவுகளுக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கினால் மட்டுமே அவற்றை நிறைவேற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்த இரு அமைச்சுக்களையும் ஜனாதிபதியிடம் வழங்குவதைத் தவிர ஐ.தே.கவால் வேறு எதுவுமே செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரதமர் ரணிலுக்கு உடன்பாடு இல்லாதபோதும் நல்லாட்சி அரசைக் காப்பாறுவதற்காக இந்த விடயத்தில் அவர் விட்டுக் கொடுப்புடன் நடக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நிகழவுள்ள அமைச்சரவை மாற்றத்தின்போது இந்த இரு அமைச்சுக்களும் ஜனாதிபதியின் கைக்கு அல்லது சு.க. அமைச்சர்கள் இருவருக்கு வழங்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

தேசிய பொருளாதாரச் சபையின் ஊடாக நிதி சார்ந்த திட்டங்களை முன்னெடுப்பது மற்றும் கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு 'ரப்' கணினி வழங்கும் திட்டத்தை இடைநிறுத்தியமை ஆகிய இரண்டு தீர்மானங்களையும் ஜனாதிபதி நேற்று அமைச்சரவையில் அறிவித்தமையால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அது தொடர்பில் கடும்அதிருப்தியைவெளிப்படுத்தினார் என்று அறிய முடிகின்றது.

தேசிய பொருளாதாரச் சபை நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இது தொடாபில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொருளாதார முகாமைத்துவத்தின்போது நாட்டுக்குத் தேவையான துரித மாற்றங்கள் மற்றும் தீர்மானங்கள், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

எட்டாவது முறையாகக் கூடியிருக்கும் தேசிய பொருளாதாரச் சபை நாட்டின் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் கடந்த வருடம் அமைக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் சரத் அமுனுகம, நிமல் சிறிபால டி சில்வா, மங்கள சமரவீர, ஜோன் செனவிரத்ன, சஜித் பிரேமதாச, ரவூப் ஹகீம், மலிக் சமரவிக்கிரம, பைஸர் முஸ்தபா, நவின் திசாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னான்டோ, தேசிய பொருளாதாரச் சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் லிலத் பி சமரக்கோன், பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, அமைச்சரவையின் செயலாளர் சுமித் அபேசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கே.டி.என். ருவன் சந்திர, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். - என்றுள்ளது. (ஐ)

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யகர் கருஜயசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பிரதம கொறடா அனுர குமார திஸாநாயக்க உட்படக் கூட்டு எதிரணியினர் இணைந்து இது தொடர்பில் சபாநாயகருக்குத் தெரிவித்த கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்த விசேட உரை அமையவுள்ளதாகவும் சபாநாயகர் கூறினார். (ஐ)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்வென்ஸ் கெட் தெரிவித்தார்.

நோர்வே அரசின் நிதிப் பங்களிப்பில் காங்கேசன்துறை தெற்கு, பளை வீமன்காமம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு அண்மையில் மீள்குடியமர்ந்த மக்களின் சமூகச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும்பொருட்டு, இந்த மண்டபத்தை நோர்வே அரசு ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஊடாக நிர்மாணித்து வழங்கியுள்ளது.

60 லட்சம் ரூபா செலவில் நிர்மாணினிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை இலங்கைக்கான நோர்வே உதவித் தூதுவர் மொனிக்கா ஸ்வென்ஸ்கெட் திறந்து வைத்தார்.

யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

வடக்கு - கிழக்கு மக்களின் மீள்குடிமர்வில் பெரும் பங்களிப்பை நோர்வே வழங்கி வருகிறது. அந்தத் திட்டங்களை நோர்வே தொடர்ந்தும் முன்னெடுக்கும். மயிலிட்டித் துறைமுகத்தை நவீனமுறையில் அபிவிருத்தி செய்யும் பொருட்டு சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை நோர்வே அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. - என மொனிக்கா ஸ்வென்ஸ் கெட் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் சுமந்திரனின் விடாப்பிடியான வாதத்தை அடுத்து, ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் மீதான விவாதம் காலவரையறை இன்றிச் சபாநாயகர் கருஜயசூரியவினால் ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றுச் சபை ஒத்திவைப்பு வேளையின் போதே ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தன.

இந்நிலையில், சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒத்திவைக்கப்பட்டமையை அடுத்து, நேற்றைய சபை நடவடிக்கைகளும் இன்றைய தினம் வரை ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்கிழமை மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளை சபை ஒத்திவைப்பு வேளையின்போது, விவாதத்துக்கு எடுக்க முற்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி உரையாற்றியமையை அடுத்தே சர்ச்சையான நிலைமை ஏற்பட்டது.

இதன்போது எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கூறுகையில் -

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தமிழ் மொழி மூலம் கிடைக்கப் பெறவில்லை. இது தொடர்பாக ஏற்கனவே நாம் சபையின் அவதானத்துக்குக் கொண்டு வந்தோம். எனினும், இன்னும் இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தமிழ் மொழியில் வழங்கப்படவில்லை. ஆகையால் இந்த விவாதத்தில் எமது கட்சியினால் கலந்துகொள்ள முடியாது. - என்றார்.

இதன்போது கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கடுமையாக சுமந்திரன் எம்.பியை சாடி தொடர் வாதங்களை முன்வைத்தார்.

அரச கரும மொழி அமைச்சராக இருந்த நீங்கள் இவ்வாறு வாதம் புரிகின்றமை கவலையளிக்கின்றது. நீங்கள் 1970 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றீர்கள். தேசிய மொழிக் கொள்கை தொடர்பில் உங்களுக்கு தெரியாதா?. எமக்குத் தமிழ் மொழி மூலப் பிரதி கட்டாயம் அவசியமாகும். தெரியாத மொழிமூலமான அறிக்கையை கொண்டு எப்படி எம்மால் விவாதம் செய்ய முடியும்? இது எமது தவறல்ல. - என்றார்.

தினேஷ் குணவர்தன எம்.பி கூறும் போது -

நாடாளுமன்றஅறிக்கைகள் தமிழ் ,சிங்கள மொழியில் இருக்க வேண்டும். எனினும் மொழிப்பெயர்ப்பின் தாமதத்தினால் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி அறிக்கைகள் மாத்திரம் இருந்தால் போதும் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. - என்றார்.

இதன்போது தொடர்ந்து பேசிய சுமந்திரன் எம்.பி.

எனினும் மத்திய வங்கி பிணைமுறிமோசடிதொடர்பான அறிக்கை மாத்திரமே சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பாரிய ஊழல் மோசடி தொடர்பான அறிக்கை சிங்கள மொழியில் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு அறிக்கையை மாத்திரம் வைத்து கொண்டு எம்மால் விவாதம் செய்ய முடியாது. - என்றார்.

இதனையடுத்து சபாநாயகர் கருஜயசூரிய பதிலளிக்கையில் -

ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் இரு அறிக்கைகளும் தமிழ் மொழியில் சமர்ப்பித்திருக்க வேண்டும். எனினும் சுமார் 8000 பக்கங்களைக் கொண்ட தொகுப்புஎன்பதனால் இதனை மொழி பெயர்ப்பு செய்வது சிரமமான காரியமாகும்.

ஆகவே தமிழ் மொழியில் அறிக்கை சமர்ப்பிக்க முடியாமை குறித்து நான் மன்னிப்புக் கோருகின்றேன். எனினும், தமிழ் மொழிமூலமான அறிக்கை கிடைக்கும் வரை ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் அறிக்கைகள் மீதான விவாதத்தை ஒத்திவைக்கின்றேன். - என்றார். (ஐ)

## இரகசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் ரெலோ செயலாளர் நாயகம் ஸ்ரீகாந்தா இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

இரகசிய வாக்கெடுப்பை நடத்துமாறு ஏன் கோருகின்றார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில், அவ்வாறு கோருவதன் ஊடாக எங்கள் கட்சியில் இருக்கின்றவர்கள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்றும், அவ்வாறு வாக்களிப்பதன் ஊடாக அந்த இடங்களில் தாம் ஆட்சி மைத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் கருதலாம்.

ஆனால் எங்கள் அணியில் இருந்து ஒருவர் கூட அவர்களுக்காக வாக்களிக்கமாட்டார்கள். அவர்கள் தமது கனவைக் கலைத்துவிட வேண்டும்.

அவர்கள் கூறுவது ஆரோக்கியமான அரசியல் இல்லை. அது அரசியல் நாகரிகமற்றது. அவர்கள் நினைப்பது போன்று எங்கள்தரப்பில்கட்டாக்காலிகள் யாருமில்லை. - என்றார்.(ஐ-7)

## அப்பச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பச்சியாக மாறியுள்ள மஹிந்தவிடம் ஆட்சியை நடத்திச்செல்ல இடமளிக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வண. ஞானசாரதேரர்.

பொதுபல சேனா அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அதன் பொதுச் செயலாளர் வண. ஞானசாரதேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்துகொண்டு தமக்கு தேவையான அரசொன்றை அமைக்க முடியாது எனின் அந்தப் பதவியில் இருந்து என்ன பயன் ?

அரசை நடத்திச் செல்ல ரணில் விக்கிரமசிங்கேவுக்கோ அல்லது உள்ளூராட்சித் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று அதிகமானோரின் அப்பச்சியாக மாறியுள்ள மஹிந்தவுக்கோ இடமளிக்க வேண்டும். - என்றார். (ஐ)

## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளது. ஆகவே பொது தேர்தலை நடத்தச் சந்தர்ப்பம் ஏற்படுத்திவிட்டு நல்லாட்சி அரசு வீட்டுக்குச் செல்வதே ஒரே வழி என்று கூட்டு எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

வரலாற்றில் பாரிய தோல்விக்கு ஐ.தே.க. முகங் கொடுத்துள்ளது. ஐ.தே.கவின் பொருளாதார வேலைத்திட்டம் தோல்வியடைந்துள்ளது. நல்லாட்சி என்ற பெயரில் பிணைமுறி மோசடியைச் செய்து நிதி நெருக்கடி மற்றும் மோசடியை மேற்கொண்டமை நாடு முழுவதும் அம்பலமாகியுள்ளது. மக்களின் ஆணையின் பிரகாரம் அரசு படுதோல்வியடைந்துள்ளது.

மக்கள் ஆணை கொடுத்தும் அரசு தொற்றி நிற்க நினைக்கின்றது. சர்வதேச முதலீடுகள் வீழ்ச்சி கண்டுள்ளன; பங்குச் சந்தையும் வீழ்ச்சி கண்டுள்ளது. இதுதான் நாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளாகும். அரசின் தகவல்களையும் தரவுகளையும் மக்கள் நிராகரித்துள்ளனர்.

மக்கள்வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் இந்த அரசுக்கு ஜனநாயக ரீதியாக அரசொன்றைக்கொண்டுசெல்லமுடியாது என்பதால் தான் மஹிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன வெற்றி பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்திஉரிய முறையில்நாட்டின் ஆட்சி செய்யும் சந்தர்ப்பத்தை உரியவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.-என்றார். (ஐ)

## அமைச்சரவைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் நேற்று முன் தினம் தணிந்த நிலையில் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி வரும் அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜயசேகர ஆகியோர் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதேவேளை, கூட்டு அரசில் அங்கம் வகிக்க விரும்பாதவர்கள் சுதந்திரமாகத் தனித்துச் செயற்பட முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிக்கு வைக்கப்பட்டிருந் தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர்நீதியரசர்சி.வீ.விக்னேஸ்வரன் உட்பட பல பிரமுகர்கள் நேற்று நீலகண்டனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இன, மத, மொழி வேறுபாடின்றி அரசியல் தலைவர்கள் நீலகண்டனுக்குஅஞ்சலிசெலுத்துவதற்கு நேற்றுத் திரண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(மேலும் செய்தி 7 ஆம் பக்கத்தில்)

# மைத்திரி – ரணில் உறவு நீடிக்காது

கொழும்பு, பெப். 21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான அரசியல் ரீதியான கூட்டு நீண்டகாலத்திற்கு நீடிக்காது என்று தேசிய அரசை ஆட்சிபீடம் ஏற்றுவதற்கு உழைத்த இடதுசாரிக் கட்சியொன்றின் தலைவர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.



இதனால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்றும் நவ சமசமாஜக் கட்சியின் தலைவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன வலியுறுத்தியிருக்கின்றார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன இந்தக் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க முற்போக்கு கொள்கையுடைய தலைவராக இருந்தாலும், அவருக்கு அவரது கொள்கைகளையும், திட்டங்களையும் இணைந்து செயற்படும் அரசியல் தலைவர்கள் மற்றும் கீழ்மட்ட அரசியல்வாதிகளுக்கு தெளிவுபடுத்தி அவர்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுவதற்கான சிறந்த தலைமைத்துவம் இல்லை.

ஜனாதிபதியை வரையறுக்குள் வைத்துவிட்டு அரசைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதேவேளை, பெரும்பான்மைப்பலத்தை நிரூபிக்க வேண்டுமானால் சிறுபான்மை இனத்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் – முஸ்லிம் கட்சிகளுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதனைச் செய்தால் யாராலும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக எதனையும் செய்ய முடியாது. அதனையும் மீறி அரசை கவிழ்க்க வேண்டுமானால் சட்டத்திற்குப் புறம்பாகச் சென்று செயற்பட வேண்டிய நிலை ஏற்படும்.

அதேவேளை, இராணுவம் – பொலிஸ் ஆகிய துறைகளை மீளாய்வு செய்து அவற்றை கடும் கண்காணிப்புக்குள் வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கண்காணிப்பு நடவடிக்கைகளை அமைச்சர்களான ராஜித மற்றும் சஜித் ஆகியோரை இணைத்துக்கொண்டு செய்ய முடியுமானால் சதிகாரர்களுக்கும் முகம்கொடுக்க முடியும்.

அதேவேளை, ஜனாதிபதியையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு ஆட்சியை முன்னகர்த்த முடியும். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தியுள்ள 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தெளிவானதும் உறுதியானதுமான தலைமைத்துவமொன்று தேவைப்படுகின்றது.

அதன் ஊடாக மாத்திரமே இந்த அரசை ஜனாதிபதி மற்றும் ஏனைய தரப்புக்களால் விடுக்கப்படும் அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியும்.

ஏனெனில் 19 ஆவது அரசமைப்பை மீறி கடந்த காலங்களில் ஜனாதிபதி பல தடவைகள் செயற்பட்டிருக்கின்றார். அரசு எடுத்த பல தீர்மானங்களை ஜனாதிபதி தலையிட்டு இரத்துச்செய்திருந்தார்.

இவை சட்டவிரோதமானவை. ஆனால், அரசில் இருந்தவர்கள் எதிர்ப்பை வெளியிடாததால் ஜனாதிபதி தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டார். அதனால், ஜனாதிபதி தான்தோன்றித் தனமாகவும் அடாவடித்தனமாகவும் செயற்பட இடமளிக்காது அவரை ஆணி அடித்து கட்டுப்பாட்டுக்குள் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, மக்களை தூண்டிவிட்டு அரசுக்கு எதிராக கிளர்ச்சிகளைத் தூண்டவும் முற்படலாம். அவற்றுக்கும் முகம்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு பலம்வாய்ந்த தலைமைத்துவமொன்று அவசியமானது. இதனை மனதில் கொண்டே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட வேண்டும்.

இதற்கு அவர் தலைமைத்துவக் குழுவொன்றை ஏற்படுத்தி அதன் ஊடாக தனக்கான ஆதரவையும் – ஒத்துழைப்புக் களையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியில் மாத்திரமே பெற்றுக்கொடுக்க முடியும்.

இந்த யதார்த்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான இரா.சம்பந்தனும் – சுமந்திரன் ஆகியோர் நன்கு புரிந்துகொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் மேற்கொண்ட போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதிக்கவில்லை.

அவற்றுக்கு பல தடைகளை விதித்தார். எவ்வாறாயினும் தமிழ் மக்கள் தரப்பில் மூத்தவர்களும் படித்தவர்களும் சம்பந்தன் – சுமந்திரன் ஆகியோரின் தலைமைத்துவத் தையே ஏற்றுக்கொள்கின்றனர்.

அவர்களும் நான் கூறும் இந்த யோசனைகளை ஏற்றுக் கொள்கின்றனர். முற்போக்கு வாதிகள் என்ற வகையில் ரணில் தலைமையிலான தரப்பை ஆதரிக்காவிட்டால் இதனைவிட மிகவும் மோசமான நிலைமை ஏற்படும் என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றன.

வெள்ளை ஆடைகளை அணிந்துகொண்டு கூச்சலிட்டுக்கொண்டு ஜனாதிபதி மாளிகைக்கு படையெடுக்கும் தரப்புக்களே நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன.

பாசிச கொள்கையுடைய மிக மோசமான இனவாதிகளான இவர்கள் தமிழ் மக்களுக்கு தீர்வொன்று கிடைப்பதை கடுமையாக எதிர்க்கின்றனர்.

ஆனால், இந்த விவகாரத்தில் தமிழர் தரப்பு விட்டுக்கொடுக்காது தமக்கான தீர்வை பெற்றுக் கொள்வதில் உறுதியாக இருந்தால் அதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆதரவு வழங்குவார் என்று நான் நம்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்து மதத்திற்கும் தமிழுக்கும் தம்மை அர்ப்பணித்தவர் நீலகண்டன்

### பாஸ்க்கரா இரங்கல் செய்தி

கொழும்பு, பெப். 21

தமிழ் பேசும் மக்களின் ஒரு நேரிடையான குரலாகவும் அவர்களின் துயரங்களை தற்துணிவுடன் வெளிக்கொணர்ந்தவராகவும் நேர்மையான அரசியலுக்கு ஆதரவுடன் தமிழ், இந்து மதத்துக்கு தன்னை அர்ப்பணித்தவருமான அமரர் கந்தையா நீலகண்டனுக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகளை சமர்ப்பிக்கிறோம் என ஜனநாயகமக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கட்சி சார்பாக மாநகர சபை உறுப்பினர் சி. பாஸ்க்கரா தெரிவித்துள்ளார்.

## வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 4,000 கலைஞர்களுக்கு நிதியுதவி

கொழும்பு, பெப். 21

பல்வேறு துறையைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட சுமார் 4 ஆயிரம் கலைஞர்களுக்கு இந்த வருடத்தில் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இதுவரையில் சுமார் 3 ஆயிரத்து 500 கலைஞர்கள் பதிவு செய்துள்ளனர் என கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கொக்குல பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வயதான கலைஞர்களுக்கு நிதி உதவிவழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் கீழ் 60 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறாத பல்வேறு துறையைச் சேர்ந்த கலைஞர்களுக்கு உதவும் வகையில் பிரதேச செயலாளர் மட்டத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தொகை வருடம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்றது. 2017ஆம் ஆண்டில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிரேஷ்ட கலைஞர்கள் 10 ஆயிரத்து 42 பேருக்கு நிதிஉதவி வழங்கப்பட்டது எனப் பணிப்பாளர் அனுஷா கொக்குல பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டார்.

(க)

## நீலகண்டனின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மன வேதனையுமடைந்தேன்!

### இரா. சம்பந்தன் அனுதாபச் செய்தி



மூத்த சட்டத்தரணியும் சமய, சமூக சேவையாளருமான கந்தையா நீலகண்டனின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மிகுந்த மன வேதனையுமடைந்தேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

வடமராட்சி, கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட நீலகண்டன், சட்டக் கல்வியை மேற்கொண்டு 1970 ஆம் ஆண்டு சட்டத்தரணியாகத் தனது தொழிலை ஆரம்பித்தார். தமிழர் அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர், தமிழ்த் தலைமைகளிடையே என்றும் ஒற்றுமையை வலியுறுத்தி வந்தமையுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திலும் பெரும் பங்குகொண்ட ஒருவராக விளங்கினார்.

இந்த நாட்டிலுள்ள இந்து சமய அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராக நீண்டகாலம் அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கிய அன்னாரது பங்குபணிகளைக் கருத்திற் கொண்டு பின்னாளில் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இறக்கும் வரை அப்பணியில் அயராது ஈடுபட்டிருந்தார்.

போர் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களினால் மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் இம்மன்றம் மேற்கொண்ட நற்பணிகளில் நீலகண்டனின் பங்கு அளப்பரியது.

தமிழ் மக்களுக்கும் இந்து சமயத்துக்கும் பாதகமான செயற்பாடுகள் இடம்பெற்ற போதெல்லாம் துணிச்சலுடன் மன்றத்தின் சார்பாகக் கண்டனங்களையும் எதிர்க்குரலையும் எழுப்பிவந்தமையை இவ்வேளையில் நினைவுகூர்வது பொருத்தமானதாகும்.

தலைநகரில் தமிழ்ப் பணியாற்றிவரும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினராக அங்கம் வகித்த அவர், அதன் தலைவராகப் பணியாற்றும் சிறப்பையும் பெற்றிருந்தார்.

சட்டம், சமயம், அரசியல், தமிழ்ப்பணி என பன்முகப் பணிகளை மேற்கொண்டு வந்த அன்னாரது மறைவு சட்டத்துறைக்கும் குறிப்பாக இலங்கைவாழ் இந்துக்களுக்கும் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்.


அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும், தமிழரசுக் கட்சியின் சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுகின்றேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.









காணாமலாக்கப்பட்ட உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் ஓராண்டு நிறைவுற்ற நிலையில், அவர்கள் நேற்று மேற்கொண்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள்.





பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி பாபா ஆலயத்தில் சீரடிசாயி பாபாவின் வெண் பளிங்குத் திருவுவச்சிலை பிரதிஷ்டை வைபவம் சமீபத்தில் சமய அனுஷ்டானங்களுடன் இடம்பெற்றது. இதன் போது, சீரடி பாபாவுக்கு அபிஷேகம் நடைபெறுவதையும், கொழும்பு சீரடி சாயி மத்திய நிலையத் தலைவர் எஸ். என். உதயநாயகன் பருத்தித்துறை சாயி சேவா நிலையத்தின் தலைவர் தி. பிரசாத்தை கௌரவிக்கின்றமையையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

## பல்கலை. மாணவர்கள் படுகொலை:

# பொலிஸார் ஐவருக்கு எதிரான வழக்கு மே 7வரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 5 பொலிஸாருக்கும் எதிரான வழக்கு மே மாதம் 7ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கவில்லை எனக் குற்ற விசாரணைப் பிரிவினர் மன்றுக்கு அறிவித்தனர். இந்த நிலையிலேயே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மாணவர்களான விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் கொக்குவில் – குளப்பிட்டியில் 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி நள்ளிரவு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பொலிஸார் மீது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டது. 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஐவருக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.

இந்த வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தி மாணவர்களின் கொலைக்கு விரைவாக நீதி வழங்கப்படவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் வலியுறுத்தியிருந்தனர்.

மூன்று மாதங்களுக்குள் நீதி பெற்றுத்தரப்படும் என ஜனாதிபதி மாணவர்களிடம் வாக்குறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பதில் அமைச்சர்

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பதில் அமைச்சராக நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரான கயந்த கருணாதிலக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் சரத்பொன்சேகா வெளிநாடு சென்றிருப்பதனால் அந்த அமைச்சின் பதில் அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.